குறள் நெறி

தமிழ் வாழ்க

ஆசிரியர்: பேராசிரியர் சி. இலக்குவனார்

(கட்சிச் சார்பற்ற அரசியல், இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் இயக்க வெளியீடு)

ஆண்டுக் கட்டணம் ரூ. 5. திங்களிருமுறை வெளிவருவது தனி இதழ் விலை 25 காசு

மலர்: 1 | திருவள்ளுவராண்டு 1995 சித்திரைத்திங்கள் 3ஆம் நாள் (15-4-1964) | இதழ்: 7

இந்தி முதன்மையைத் தடுக்க எல்லோரும் கூடுமின்

'இந்தி' தான் இப்பரத கண்டத்தின் அரசு மொழியாகும் உரிமை பெற்றுள்ளது எனத் தலைவரின் தனி வாக்கொன்றால் தாமே ஏற்பாடு செய்து கொண்டு அதனை அரசு கட்டிலில் அமரச் செய்து, இந்தியைப்போல் இந்திய அரசு மொழிகளாக இருப்பதற்கு உரிமையுள்ள ஏனைய தேசிய மொழிகளை அடிமை நிலைக்கு ஆளாக்கியுள்ளனர். பாராளு மன்றிலும் இந்தி அரசுப் பணித்துறைகளிலும் இந்தி மொழியினர்க்கே இடம் என்ற நிலையை உண்டு பண்ணி விட்டனர். இந்திய அரசுப் பணியில் அமர்வோர் குறிப்பிட்ட காலத்துக்குள் இந்தி மொழியில் குறிப்பிட்ட தேர்வு பெறவில்லையானால், பதவியில் நிலையாக அமர முடியாது; ஆண்டு ஊதிய உயர்வும் அளிக்கப் பட மாட்டாது என அறிவித்து நடைமுறையிலும் கடைப் பிடித்து வருகின்றனர் இந்திய அரசுப் பணித்துறையில் உள்ளோர்க்கு அவரவர் அலுவலகங்களில் அலுவல் நேரங்களிலேயே இந்தி கற்குமாறு வற்புறுத்தப் படுகின்றனர்.

இவ்வளவும் செய்து கொண்டே "நாம் இந்தியைக் கட்டாயப் படுத்திச் சுமத்தவில்லை; தென்னாட்டு மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமே இணைப்பு மொழியாக இருக்கும்" என்று பறையறைந்து வருகின்றனர். ஆனால் அண்மையில் தென்னாட்டில் சுற்றுப் பயணம் செய்த திரு. மொரார்சி தேசாய் தெளிவாகக்கூறி விட்டார் 'இந்தி ஒன்று தான் இந்தியரசின் மொழி; இதனைக் காங்கிரசுக்காரர்கள் அச்சமின்றி ஆண்மையுடன் கூற வேண்டும்'' என்று ஒளிமறைவின்றிக் கூறியமை பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால் "நாங்கள் தான் இந்தி மொழிக் காரர்கள் தாம் ஆளுவோம்; ஏனைய மொழியாளர்கள் அடிமை நிலையிலேயே இருக்க வேண்டும். "என்று கூறாமல் கூறியுள்ள துணிவை என் என்பது?

தென்னாட்டார்க்கு - குறிப்பாகத் தமிழ் நாட்டார்க்கு மொழிப் பற்றும் உரிமைப் பற்றும் இல்லை என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டனர் போலும். பதவியைப் பெறுவதிலும் அதனைக் காத்துக் கொள்வதிலும், பணத்தை எவ்வழியிலும் ஈட்டுவதிலும் அதனை நன்கு காத்துக்கண்டு மகிழ்வதிலுமே கருத்துச் செலுத்துவர் என்றும் கண்டு கொண்டிருப்பர் இல்லையேல் இவ்வளவு துணிவாக "அச்சமின்றிக் கூறுங்கள்" என ஆணையிட்டிரார் அன்றோ?

தமிழ் நாட்டு நிலைதான் என்ன?

இந்திய மொழிகளின் தாய் எனக் கூறத்தகும் தொன்மைச் சிறப்பும் இலக்கணவரம்பும் இலக்கிய வளமும் பெற்றுள்ள தமிழைக் கொண்டுள்ள தமிழ் நாட்டவர், தம் மொழிக்குரிய உரிமையை அளியாது தாழ்த்துவதைக் கண்டும் வாய்வாளாமை கொண்டு, வீடு பற்றி எரியுங்கால் வெந்ததை உண்டு கொண்டிருப்பார் போன்று அவரவர் போக்கில்போய்க் கொண்டிருக்கின்றனர். திராவிட முன்னேற்ற கழகம் ஒன்று தான் இவ்விந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட்டம் நடாத்தி வருகின்றது; அதன் தலைவர்களும் தொண்டர்களும் ஆண்மையுடன் சிறைசென்று அல்லல்பட்டு வருகின்றனர். ஏனைய கட்சியினரும் கட்சி வேற்றுமையை மறந்து திராவிட முன்னேற்றக் கழகத்துடன் எளிதில் வெற்றி கிட்டி இந்திக் கொடுங்கோன்மை நீங்கவழி ஏற்பட்டிருக்கும்.

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்)

திருவள்ளுவர் நினைவு நாள் (9 ஆம் பக்கம்)

பிற பக்கங்களில்

சீத்தலைச்சாத்தனார் கருத்தரங்கம்

இந்தியால் தமிழ் கெடுமா?

சாதிவந்த விதம் வைத்தான் செத்தான்

தமிழும் வேலை வாய்ப்பும்

தலையங்கம் கலைக்கூடம் கொலைக்கூடமாய கொடுவினை

தொல்காப்பிய விளக்கம்

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

மொழித் தொண்டர்கள்.

சீத்தலைச் சாத்தனார்

(புலவர் இரா. இளங்குமரன்)

இறைவன் அடியார்களுள் வன் தொண்டர் உளர்; மென் தொண்டரும் உளர். வன் தொண்டர் எனப் பெயர் பெற்றார் சுந்தரமூர்த்தி நாயனார். அவர் வன் தொண்டருக்குச் சான்றாவர்! மணிவாசகரும் இராமலிங்கரும் மென்தொண்டருக்குச்சான்றாவர்கள். மொழித் தொண்டர்களினும் இவ்வாறு வன் தொண்டரும் உளர்: மென் தொண்டரும் உளர். மொழிப் பிழை செய்தாரைத் தலையில் குட்டிய பிள்ளைப் பாண்டியனும், காதைக் குடைந்து அறுத்த வில்லியும் வன் தொண்டர்கள். சாத்தனாரோ மென் தொண்டர். மொழிக் குறை செய்தாரின் நிலைக்கு இரங்கி நொந்து தம் தலையில் எழுத்தாணியால் இடித்துக் கொண்டார் அல்லவா!

கெய்சர் என்னும் வேந்தன் தனக்குச்சினம் ஏற்படும் வேளையில் தன் காதைப் பிடித்துத் திருகிக் கொள்வானாம். தன் பண்பு நலங்காக்க அவன் தன் காதைத் திருகிக் கொண்டான். தாய் மொழி நலம் பேணுதற்குச் சாத்தனார் தம் தலையில் குத்திக் கொண்டார்.

சாத்தனார் மொழிப் பற்றுக்கு இப் பழஞ் சான்று ஒன்றே போதும். எனினும், அவர் மொழிப் பற்று மணிமேகலைக் காப்பியத்தால் மேலும் விளக்கமாதல் உறுதி.

கள் காய்ச்சப் பெற்ற மிடாக்கள் பக்கமெல்லாம் பரவிக் கிடக்கின்றன. காயவைத்த எலும்பும் தசையும் நோக்கு மிட மெல்லாம் நீக்கமற நிறைந்து கிடக்கின்றன. இச் சூழலுக்கு இடையே அமைந்த இருக்கையில் வீற்றிருக்கின்றான் ஒருவன். அவன் மனைவியும் அடுத்து வீற்றிருக்கின்றாள். இவர்கள் வீற்றிருப்பு ஆண் கரடி ஒன்று தன் பெட்டையொடு திருக் கோலம் கொண்டிருக்கும் காட்சியை நினைவு படுத்துகின்றது. நாகர் தீவில் வாழும் மக்களது தலைவனும் குருமகன் நிலைமை இது. இதனை எழிலுறப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் சாத்தனார்.

இக்குருமகனால் ஆளப்படும் நாகர்கள் தாம் எத்தகையர்?

பச்சையாகவே ஊனைத் தின்பர்; மனித ஊன் என்றால் அதன் மேல் மட்டற்ற காதல்; ஆடை உடுத்தும் வழக்கம் அவர்கள் அறியாதது. இளகிய மனம், இன்சொல், அன்புஇவை அவர்களுக்குப் புரியாத பாடங்கள்!

இத்தகைய நாகர்கள் இடையே அகப்பட்டுக் கொள்கின்றான் சாதுவன் என்னும் வணிகன். கடல் கடந்து வாணிகத்தால் பொருள் தேடச் சென்றவன் கப்பல் கவிழக் கடலுக்குள் வீழ்ந்து தத்தளிக்கிறான். உடைந்த துண்டம் ஒன்று பற்றி, அலை அடித்துத்தள்ள, அடை கரை ஒன்றை அடைகின்றான். அங்கே நாகர்களால் சூழப்படுகின்றான். இனி என்ன ஆவான்? நயத்தக்க குணமற்ற நாகர்கள் இடையே சிக்குண்ட சாதுவன் தசை தசையாக, எலும்பு எலும்பாக எடுத்துத் தின்னப் படுவான் அணு அணுவாகச் சாவான். இப்படி நேர்ந்திருக்க வேண்டும். ஆனால் நேர்ந்ததென்ன?

நாகர்கள் தன்மையை நன்கறிந்திருந்த சாதுவன் அவர்கள் மொழியில் பேசுகின்றான். கொன்று தின்னுமாறு நின்றவர்களும் தங்கள் மொழி பேசுகின்றான் என்னும் ஒரே ஒரு காரணத்தால் விலகி நின்று இரக்கம் காட்டுகின்றனர் கொல்லும் நினைவு ஒழிந்து குருமகனிடம் அழைத்துச் செல்லுகின்றனர். கரடிக்குருமகன் காதினிக்குமாறு சாதுவன் நாகர்மொழி பேசுகின்றான் உயிர் பிழைத்தது மன்றி உயரியபரிசுகளும் பெற்று உவப்புறுகின்றான்.

மதயானையின் கையில் பட்டுத்தப்பினாலும் தப்பலாம்! புலிவாய்ப்பட்ட புல்வாய் தப்பினாலும் தப்பலாம், மாந்தரைக் கொன்று தின்னும் நாகர்களிட மிருந்து தப்ப வழியில்லை என்றாலும் சாதுவன் தப்புகின்றான். காரணம், சாதுவனுக்குநாகர்மொழி தெரிந்திருந்தது! சாதுவனுக்கு நாகர் மொழி தெரிந்திருந்தால் மட்டும் போதுமா? நாகர்களுக்குத்தம் தாய் மொழிமேல் பற்று இருந்தது. ஏன்? அதுவே அவர்களுக்கு உயிராக இருந்தது இல்லையேல், உயிரோடு சாதுவனை விட்டிருப்பார்களா?

நாகரிக மற்ற–நயமற்ற–நாகர்களிடம் இருந்த மொழிப் பற்று நந்தமிழரிடம் உண்டா? உண்டாயின் உலகெல்லாம் செங்கோல் செலுத்த வேண்டிய செந்தமிழ் இன்று ஒட்டுக் குடியும், ஒதுக்குக் குடியும் போலப் புறக் கணிக்கப் பட்டுக் கிடக்குமா? நம் மொழி பேசுவோர்களிடையே பிளவும் பிணக்கும், அரிப்பும் எரிப்பும் நிகழ்ந்த வண்ணம் இருக்குமா? அல்லது, "தமிழ்த்தாய் யாண்டு உறைகிறாள்? அரசாங்கத்தில் வீற்றிருக்கிறாளா? மன்றங்களில் வதிகிறாளா? சட்ட சபைகளில் வாழ்கிறாளா? கல்லூரிகள் எனப்படும் நிலையங்களிலாதல் அவளைப் பார்க்கலாமா? உரிமைக்கு உழைப்பதாகச் சொல்லப் படும் அரசியல் கழகங்களிலாதல் அவளைக் காணலாமா? தமிழ்ப் பத்திரிகைகள் தமிழ்த்தாயின் சிகையை-கழுத்தை-இடுப்பை-கொய்யும் இறு வாளாகவும், அறுக்குங் கொடுவாளாகவும், உடைக்கும் தண்டமாகவும் அல்லவோ உலவுகின்றன." என்று தமிழ் வாழ்வே தம் வாழ்வு எனக் கொண்ட தமிழ்த் தென்றல் திரு. வி க. 1924 ஆம் ஆண்டு கரைந்துருகிக் கண்ணீர் வடித்து எழுதிய எழுத்துக்கள் காட்டும் நிலைமைஇன்றளவும்சற்றும்மாறாதிருக்குமா?

வாழ்க! வாழ்க!

— இரா. வில்லாளன்

நாடாண்ட பாண்டியரின் மதுரை மண்ணில்
நாவாண்டு தமிழ்மறையை எடுத்துக் கூறி
ஏடாண்டு தமிழோச்சி இனிமை கண்ட
எந்தாயின் பெருமையினை என்ன சொல்வேன்
பாடாண்டு பண்டடனே படித்துத் தீரப்
பைந்தமிழில் இலக்குவனார் மேவு கின்ற
நீடாண்ட குறள்நெறியே வளர்க வென்று
நாவலைத்துக் கவிதையிலே வாழ்த்து கின்றேன்.

'குறள்நெறி' (நாரை இறையடியான்)

—[கட்டளைக் கலித்துறை]—

சாதி மடியச் சமநிலை சாற்றும்; அனைத்துயிர்க்கும்
நீதிப் பொதுமை நிலையை நிறுவும் நிலவுலகில்!
ஆதி தெளிவை யகத்தில் அமைக்கும்; மடமலையை
மோதி யுடைக்கும் முறைமையில் மூத்த
குறள்நெறியே!

முத்தமிழ் காக்க முனைவீர்

— புலவர் வி. பொ. பழனிவேலன் பி. ஓ. எல்.

கட்சியென்றும் மதமென்றும் கருத்துறழ்வு
கருதாமல் தமிழ்த்தாய் வாழ
நட்புறவு கொண்டிங்கு நாம்தமிழர்
என்றவகை ஒன்றிக் கூடி
மொழிவழியே நின்றுபகை களையமுனைந்
திடுவீரே, மொய்ம்புள் ளோரே,
பழிமொழிக்கும் இழிமொழிக்கும் ஆளாவீர்,
கான்முளைகள் கடிவர் பின்னே.

'குறள்நெறி' குவலயத்தில் ஓங்குக

— புலவர் இரா. வடிவேலன்

விறற்றமிழர் வாழ்வின் வினையெல்லாம் காட்டக்
'குறள்நெறி'யே கூடவிலே வந்தாய்-திறம்பொங்கும்
செந்தமிழை, நந்நெறியைச் சீர்த்தியினை எங்கெங்கும்
முந்திப் பரப்ப நீ செல்!

கருத்து அரங்கம்

இந்தியால் தமிழுக்குக் கேடு...?

(மே. சி. சிதம்பரனார்)

விடைகள்

வினா 1: இந்தியால் தமிழ் எந்த வகையில் அழிகிறது? அழிந்தது? அழியும்?

மேல் நாட்டில் புகழ்பெற்ற வரலாற்றுப் பேராசிரியர் "பின்னமாலியட்" என்பாரிடம் எதிர்கால விளைவுகளின் ஐயப்பாடுகள் பற்றி மக்கள் பல கேள்விகளைக் கேட்டுக்கொள்வதுண்டாம். அவற்றுள், ஒரு நாட்டிற்கு வரும் மீளாத பேராபத்து எது? எவ்வித ஆபத்திற்கும் மீட்சியுண்டு. அந்நாட்டுத் தாய்மொழி மெல்ல மெல்ல மங்கி மறைவதுதான் மீளாத பேராபத்து. ஒரு நாட்டை என்றும் அடிமையாகவே வைத்திருக்க வேண்டுமானால் செய்வதென்ன? முதற்கண் அந்நாட்டின் மொழிவளத்தைக் கெடுக்க வேண்டும் இங்ஙனம் கூறிய விடைகள் நம் நாட்டிற்கும் ஏற்றதுதானா? என்பது காணலாம்.

முதல் மாந்தன் தோன்றிய குமரி மலையும் அதுசார்ந்த 49 தமிழ்நாடுகளும் கடல் கோட்பட்ட ஞான்று பயந்து வடக்கோடிய மக்கட்குக் கங்கைக்கரை சார்ந்த நிலம் பகிர்ந்தளித்தவன் "நிலந்தரு திருவிற்பாண்டியன்" என்பதும், "குமரிமுதலிமயம் வரை ஒரு மொழிவைத்தாண்ட இமயவரம்பன். நெடுஞ்சேரலாதன்" என்ற வழக்காறும், "சிந்துவெளியில் "மாய்ஞ்சதரை" "ஆரப்பார்" முதலிய இடங்களிற் புதையுண்ட நகரங்களை அகழ்ந்ததிற் கிடைத்த ஆபரணங்கள், பல கருவிகள். கி. மு. 2800 அதற்கு முன்னும் வாழ்ந்த பண்டைத் தமிழர்களுடையதென்றே அறுதியிட்டுக் கூறலாம்" என்ற புதைபொருளாராய்ச்சி வல்லுநர், "மார்சல் மக்கே" அவர்களின் கூற்றும், மேலும் பல்சான்றுகளானும் தமிழகம் வடா அது பனிபடு நெடுவரை வடக்கும் - தெனா அ திருகெழு குமரியின் தெற்குமாய்" தமிழகம்; தமிழ், தமிழர். என நாடு. மொழி, மக்கள் என்ற மும்மைப் பற்றும் தமிழ் பண்பாடும் கொண்டு செழிப்புற வாழ்ந்து வந்தனரென்பதற்கியாதுமையப்பாடின்றாம்.

ஏறத்தாழ கி. மு. 1500ல் வடவர் வடமேற்குக் கணவாய் வழியே தமிழ்நாடு புகுந்தவுடன் போர்தொடுத்தாரிலர். 'அகத்தியர். பபர்ககவாசு' என்ற இரு புரோகிதக் குடும்பங்களைத் தென்கோடி வரையுள்ள மொழி வளத்தின் உளவறிந்து வரச் செய்தும். தங்கள் பண்படா மொழியோடு மலையோரப் பகுதிகளில் வழங்கிய 'பிராகிருதம், பிராகுவி" என்ற மொழிகளையும் சேர்த்துச் செம்மைப்படுத்தியதாலேயே "சமசுகிருதம்" எனப் பெயர்கொடுத்து இம்மொழி தேவர்களால் பேசப்படும் உயர்ந்த மொழி என்றும், இம்மொழியின் சுவடிகள் பிரமதேவனால் எழுதினவென்றும், இதிலுள்ள கொள்கைகள் நாட்டிற்கு நன்மை பயப்பனவென்றும் சில நூற்றாண்டுகள் வரை மொழியை புகுத்திய பின்பே பல சூழ்நிலைகளாலும், படிப்படியாகப் பாரசிகம், ஆப்கானித்தானம், பாஞ்சாலம், தில்லி. பீகார் முதலியவிடங்கள் ஆரிய நாடுகளாயின. தமிழகத்துள் ஆரியமொழி ஆட்சி மொழியாயின. ஆங்காங்கெழுந்த போர்களும் ஆரியத்துக்கு வெற்றி தந்தன. வடபாலில் இயற்கையாற்றல் மருட்சியும், அறியாமையும்கொண்ட மக்கள் எளிதின் ஆரியத்தின்பால் சாய்ந்தனர். தென்னாட்டிலும் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி முதல் அராசசூயம் வேட்ட சோழன் பெருநற்கிள்ளிவரை வேத வேள்வியிலிறங்கினர். தமிழர் பண்பாடுகள் சரியத் தொடங்கின. வடமொழியின் மதிப்புயர்ந்து வந்தன.

> பண்டைக்காலந் தொட்டு இதுகாறும்நடைபெறும்மொழி தமிழ் ஒன்றே ஆகும். பண்படுத்தப்பட்ட பழைய மொழிகளில் தன்னைத்தவிர மற்றையவெல்லாம் இறந்துபோகவுந், தான்மட்டும் இறவாமல் நடைபெற்றுப். பன்னூறாயிரம் மக்களுக்குப் பெரிது பயன்பட்டு வரும் பெருஞ் சிறப்புவாய்ந்த தமிழ்மொழியைக், கல்லாதவர் எல்லாந் தூயதாய் வழங்கிவர, அதனைக்கற்று அதனாற் பேரும் புகழும் பொருளும் அடைந்து வருஞ் சிற்சிலர் மட்டுந் தமக்கு எல்லா நலங்களையுந் தந்து தாயினுந் தம்மைப் பாதுகாத்து வரும் அதனை நிலைகுலைத்து அழித்தற்குக் கங்கணங் கட்டி நிற்கின்றார்கள். இவர்களின் இக்கொடுஞ் செயல் தன்னைப் பெற்ற தாயைக் கொல்லுஞ் செயலினும் கொடியதாயிருக்கிறது.
>
> — மறைமலையடிகள்

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரத்திலிருந்து எட்டா நூற்றாண்டுச் சீவகசிந்தாமணிவரை ஐம்பெருங்காப்பியங்களில் மூன்றுவிழுக்காட்டிலிருந்து 10 விழுக்காடுவரை வடசொற்புகுந்தன காணலாம். பத்தாம் நூற்றாண்டிலிருந்து தமிழ் இதிகாசங்களில் நூற்றுக்கு 30 விழுக்காடு வரை வடமொழி கலந்தன. பன்னிரெண்டாம் நூற்றாண்டிலிருந்து புலவர்கள் வடமொழிகலந்து பாடுவதும் உரை நூல் எழுதுவதும் பெருமை தருவதெனக் கருதினர் போலும் சமய நூல்களிலும் தலப்புராணங்களிலும் 30 விழுக்காடிலிருந்து 50, 60 விழுக்காடு மேகலந்தன வென்பது சிலப்பதிகாரத்திலிருந்து சிவகாசித்தலப்புராணம் வரை காலவரிசையிலடுககிப் பார்த்தால் காலத்துக்குக் காலம் மக்கள் கருத்து வளர்ச்சி எவ்வாறு சென்றிருக்கிறதென்பதும் காணலாம்.

வழக்குச் சொற்களிலும் "பழமலை" என்றால். தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க்குமே" எனப் பறம்பு மலையைக் கபிலர் குறிப்பிட்டவாறு பழம்தரும் மலையென்றுகொள்ளலாகாதா "விருத்தாசலம்' என மாற்றினர் மலைகளிற் கிழட்டு மலைகளுமுண்டா? வேட்டி என்றால், வெட்டப்படுவது வேட்டி. துண்டிக்கப்படுவது துண்டு துணிக்கப்படுவது துணி இதனை இன்று தமிழ் மொழியில் ஆட்சி நடத்த இன்றியமையாத எழுத்துக்களென நம் தமிழ் நாட்டரசு மத்திய அரசிடம் வடமொழி எழுத்துக்கள் சில கடன் வாங்கியுள்ளதல்லவா? அவற்றிலொன்றான "ஷ" எழுத்தைக் கூட்டி "வேஷ்டி" என வழங்குவது உயர்வென்றே கருதியதல்லவா? ஆனால் இச்சொல் வடமொழியகராதியில் இல்லை. இருந்திருந்தால் தமிழன் கட்டும் வேட்டி என்ற சொல்லும் வடமொழிதானே எனக் கூறிவிடுவர். இவ்வாறு வழக்குச் சொற்கள் மாறி மாறி அமைந்து தமிழ்ச் சொற்கள் வழக்கிழந்தழிந்தவை பலப்பல இவற்றை "ஊரும்பேரும்" என்ற சேதுப்பிள்ளையவர்களின் நூலிற் பரக்கக் காணலாம்

மற்றொரு புலவர் "ஆற்காடு" என்பதற்குச் 'சடாரண்யம்" எனவைத்துத் தலப்புராணம் பாடினராம். இங்ஙனம் தமிழ் மொழிப் பற்றுப் போய். வடமொழியின் பற்றல்ல-பித்துப்பரவி அதன்கொள்கைகளும் உடனிகழ்ச்சியானதால், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற பண்பாடு குலைந்து, பல சாதிகள், பல தெய்வங்கள். பல மதங்கள் "பல்குழுவும் பாழ்படுத்தும்உட்பகையும்' ஆன நிலையைப் பயன் படுத்திக்கொண்டு ஒன்றன் பின் ஒன்றாக கி மு. 500லிருந்து கி பி. பதினேழாம் நூற்றாண்டுவரை வரிசையாகப் பாரசீகர், கிரேக்கர் பார்த்தியர். ஊனர், அராபியர், பட்டாணியர், அகோம்தகுர்ரானின், மொகலாயா, போர்ச்சுகீயர், ஆங்கிலேயர் எனப் பலர். நாட்டைக் கைப்பற்றினர்.

இவற்றில் இரண்டாவதாக ஆட்சிமொழியாதிக்கம் செலுத்தியது பாரசீகமாகும். இதன் பயனாக, கிராமம் மணியகார், கிச்து வசூல், தாலுகா சில்லா, தாசிதார், சிரஸ்தார், டபேதார், கச்சேரி. கசானா. மேசை, சமுக்காளாம் சன்னல் சபாசு', போன்ற பல சொற்கள் 1500 ஆண்டுகளாகியும் நிலைத்துவிட்டனவே இவைகட்கு நேர் தமிழ்ச்சொற்கள் எவை? புலவர்களைக்கொண்டு பழ நூல்களைப் புரட்டாதுகாணமுடியுமா? வழக்கிலிருந்து இத்தமிழ் சொற்கள்அழிந்தனவென்றது என் சொல்வது?

4ஆம் பக்கத் தொடர்ச்சி ... ...

மூன்றாவதாக ஆட்சிமொழியாதிக்கம் பெற்றது ஆங்கிலமாகும். இதன் பயனாக, அடுப்பங்கரையிலிருந்து ஆட்சியலுவலகம் வரை, கல்வியறிவற்ற பொதுமக்களிடமிருந்து பல்கலைக்கழகக் கல்லூரிவரை, அங்காடி வீதியிற் றொங்கும் பலகைகளிலிருந்து அயல்நாட்டு ஏற்றுமதி இறக்குமதி நிலையங்கள்வரை, மிதிவண்டி, இயக்க வண்டி, புகை வண்டி நிலையங்களிலிருந்து கடற்றுறைமுக நிலையங்கள் வரையாண்டேனும் ஆங்கிலமன்றி ஏனைய சொற்கள் தலை நீட்டியதுண்டா? அங்ஙனம் தப்பித் தடுமாறித் தென்படினும் மதிப்புறுவதுண்டா? வழக்காற்றில் வந்த அவ்வாங்கிலச் சொற்களை இவ்வளவென்று கணக்கிட முடியுமா? இவை யனைத்துக்கும் நேர் தமிழ்ச் சொற்களெவை? அழிந்தன வென்னுது என் சொல்வது?

''நாட்டிலுள்ள பொருள் வளங்கள் கொள்ளைபோகின்றன. மொழிவளங்கள் அழிகின்றன. நிலவளம் நீர்வளங்கள் பாழாகின்றன. உலக அரங்கில் நம்நாடு ஓர் அடிமை நாடென்ற பேரவமானம் வளர்கின்றது. இவையனைத்துக்கும் அந்நியர் ஆட்சியன்றோ காரணம்? இக்குறைகளகன்று மக்களே தன்னாட்சி நடத்திக்கொள்ள முதற்கண் அந்நிய ஆட்சியை யகற்ற வேண்டுமென்ற நாட்டுத் தந்தை காந்தியடிகளாரைப பின்பற்றி நாட்டு மக்கள் ஒருமைப்பாடெய்தி வரிந்து கட்டி நின்றனர். வெற்றியுடன் மக்கட்குரிமை பெற்றுத் தந்தனர். அயலாட்சி ஒழிந்தது மக்கள்கூட்டாட்சி மலர்ந்தது. ஏதேது நன்மைகளைக் காண்போமோ என இறும்பூதெய்தி மக்கள் எதிர்பார்த்து நின்றனர். 15 ஆண்டுகள் உருண்டோடின.

முழுநாடாயிருந்த தமிழ்நாடு அந்நிய ஆட்சிகளால் இமயமபோய் விந்தியம்போய் வேங்கடம் எல்லையாகத் தொல்காப்பியர் காலத்தில் இருந்து நிலைத்து நின்றது. தன்னாட்சி வந்த பின்பு வேங்கடமும் போய் மேற்கு எல்லையில் தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, பாலக்காடு முதலியன கைவிடப்பட்டன. மீந்த குறுகிய வட்டத்தையாவது 'தமிழ்நாடு' என்று சொல்லுங்களேன் என்றால் அதற்கு முழுமையான ஒப்புதல் கூட்டாட்சியில் இன்னும் கிடைத்திலது. இன்றைய நிலையிலும் நான்காவதாக இந்திமொழியாதிக்கமும் வந்துவிட்டது. இவைகள்தாம் கூட்டாட்சியில் தமிழ்நாடு வரப்பெற்ற பயன்கள்.

எனவே, தமிழ்நாட்டுடன் பல நாடுகள் வாணிப முறையிலும் அண்மை நாடுகள் என்ற முறையிலும் இருந்து வந்ததால் அந்நாடுகளில் தமிழ்மொழி குடியேறிற்றே யொழிய வேற்று மொழிகள் தமிழ்நாட்டில் நுழையவில்லை ஆட்சி மொழியாக்கிய மூன்று மொழிகளான வடமொழி பாரசிகம், ஆங்கிலம் என்றவைதான் நம்நாட்டு மொழியை அழித்து மறையச் செய்தன வென்பது அனுபவத்துக்கொத்திருப்பதால், இந்தியும் அவ்வாறே ஆட்சிமொழியாதிக்கம் செலுத்த முனைவதாய், அவ்வாதிக்கத்தை ஏற்றுக்கொண்ட நாட்டின் தாய்மொழி ஒருமை குறைந்து, மக்களார்வம் குறைந்து மறைந்து ஒழியும் என்பதொருதலை. சான்றாக மக்கள் சபை என்றால் கெடுதல் என்ன? ''லோக் சபா' என்றதால், மக்கள் என்ற தமிழ் அழிந்தது. இவ்வாறே ''ராஜ்யசபா'' பாரத்'' என்றதும். ''காசி'' என்றால் தென்னாட்டுமக்கள் புனிதப் பெயராகக் கொண்டாடுவர் அதனை 'வாரணசி'' எனத் திருத்தியதன் நோக்கம் என்ன. இவை போன்ற பல திருத்தங்களால் தமிழ் அழிந்தது; அழிந்து வருகிறது. மேலும் மேற்கூறிய நடைமுறைகள் போலவே ஆட்சிமொழி ஆதிக்கம் பெற்றால், மேலும் மேலும் அழியும் ''ஒருபாதி மால்கொள்ள மற்றொருபாதியுமையவள் கொண்டிருபாதி யாலுமிறந்தான் புராரி'' என்ற பாட்டின் நிலையைத் தமிழடையும்.

வினா 2: நம் நாட்டில் உள்ள மாநிலங்களின் தொடர்பிற்குரிய மொழி இந்தி என்பதனை ஒப்புக்கொள்கின்றீர்களா?

''இந்தி இந்தியாவின் அரசியல் மொழியாகும். அது ஒன்றுதான் தேசிய மொழி என்பதன்று. நாட்டில் 14 தேசியமொழிகள் இருக்கின்றன. தகுதியில் எல்லாம் சரிசமான நிலையை உடையனவேயாகும்''

நேரு 3-5-56 அ இ கா கூட்டம் பம்பாய்

'பதின்மூன்று மொழிகளையும் பேச்சு வழக்கிலில்லாத சமசுகிருதத்தையும் சேர்த்து இந்தியாவில் பதினன்கு பிரதான மொழிகள் இருப்பதாக அரசியல்சட்டத்தில் கண்டிருக்கிறார்கள்.''

சி. சுப்பிரமணியம் 'ஆனந்தவிகடன்' தீபாவளி மலர்-1955.

தேசிய மொழி ஒரு மாநிலத்தில் கல்லாரும், கற்றவருமாய் பெரும்பான்மையினரால்பேசப்பட்டு வரும் மொழியே தேசியமொழி எனப்படும் இவ்வாறுள்ள பதின்மூன்று மொழிகளுடன் வழக்காற்றி விறந்துபட்ட சமசுகிருதத்தையும் சேர்த்து பதினன்கு தேசியமொழிகள் எனில பொருளுண்டா? சமசுக்கிருதத்தை தேசிய மொழி எனல் ஏற்றுக்கொள்ளத் தக்கதன்றும்.

இங்கிலாந்தில் பிரார்த்தனைப் பாடல்கள் இலத்தீன் மொழியிற்றான் இருந்தது உலக வழக்கினின்றும் இறந்த மொழியில் பிரார்த்தனைப் பாடல்களிருப்பது நாட்டிற்கு அவமானச் சின்னம்'' என்ற கிளர்ச்சியினால், 1549ல்' புக் ஆப்காமன்டிரோ'' ஆங்கிலத்தில் ஒரு வழிபாட்டு நூலை வெளியிட்டது மதகுருமார்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது இந்நூலையே பின்பற்றுமாறு அரசினரும் சட்டமியற்றியதால், 1662 லிருந்து 300 ஆண்டுகளாக நிலைத்துவிட்டது அங்கு இங்கு கருமாதி வீட்டிலிருந்து கடவுளர் கோவில் வரை சமசுக்கிருதமே புனிதமொழி எனக் கருதப்படுகிறது ஆளவந்தாரும் இந்திக்கு மூல மொழி என்ற ஒரு காரணத்திற்காக குழிப் பிள்ளைக்கு மணவிழாக்கண்டு மகிழ்வதுபோன்று அம்மொழிக்குத் தனிப் பள்ளிகள், ''பிரச்சார சமிதிகள்'' கலைக்கூடங்கள், ''அனைத்திந்திய சமசுக்கிருத சாகித்திய சம்மேளனங்கள்'' முதலிய சடங்குட்காக இந்திக்குப்போலவே மக்கள் வரிப்பணத்திலிருந்து வாரியிறைக்கின்றனர். கோடிக் கணக்கில் அறமல்லாத இச்செயல்கள மொழி நாகரிகம் பெற்ற அயல்நாட்டினர் எள்ளி நகையாடற்குரியனவாம்

பொதுமொழியாக நமக்கு இந்திய கூட்டாட்சி நடத்த ஒரு மொழி வேண்டும் மாநிலத் தொடர்பு கொள்ள ஒரு மொழி வேண்டும். உலகிற் பிற நாடுகளோடு தொடர்பு கொள்ள ஒரு மொழி வேண்டும் மேலும் உலக அரசியற் றொடர்பு, உலக வாணிகத் தொடர்பு. உலக விஞ்ஞானத் தொடர்பு முதலியவற்றால் நாடு முன்னேறவும் வேண்டும். இத் தேவைகளனைத்தையும் ஒரே மொழியால் நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமானால் அத்தகுதி வாய்ந்த மொழி ஆங்கிலம் ஒன்றே என்பது, அனைத்து மொழியினர்க்கும் ஒப்ப முடிந்தஒன்று. இஃதறிந்தே இன்றை நிலையில் ஆங்கிலத்தை உலகம் தனக்குப் பொதுமொழியாக்கிக் கொண்டது. உருசியாவில் புல்கானின் மனைவி ஆங்கிலப்பேராசிரியை. என்றுமே ஆங்கிலமே எட்டிப்பாராத சப்பானில் இன்று தெருவெங்கும் முழங்குகிறது கையிலிருந்த கலச நீரைக் கவிழ்த்துக் கானலை நோக்கி ஓடுவது போல், ஏற்கனவே நமக்கமைந்த ஆங்கிலத்தை ஒதுக்கி இந்தியை பொது மொழியாக்கலாமா? என எண்ணுவது அறியாமையின்பாற்பட்டதாம். வரட்டுக் கௌரவத்துக்காக இங்ஙனம் செய்தால் நாட்டை 500 ஆண்டுகளுக்குப்பின் தள்ளிய செயலாகும்.

''ஒரு ஆள்கூடப் பேசாத மொழியையும் தேசிய மொழியாக்கும்போது இந்தியாவைத் தாயகமாய்க் கொண்ட ஆங்கிலோ இந்தியர் ஏறத்தாழ 5லட்சம்பேர் பேசிவரும் ஆங்கிலத்தை 15வது தேசிய மொழியாகச் சேர்த்தலென்ன?''

பிராங்கு அந்தோனி சட்டமன்ற உறுப்பினர். 1951 சனக்கணிதைப்படி இந்தியாவில் மொத்தம் 782 மொழிகள் பேசப்பட்டு வருகின்றன அவற்றுள் தென்னாட்டில் 17 மொழிகள் போக வடநாட்டில் 765 மொழிகள் அவற்றில் மத்தியப் பிரதேசத்தில் மட்டும், ''இந்தியிலிருந்து கீழ்க்கண்ட ...... போசபுரி வகையில் 81 மொழி பேசுவோரை இந்தி பேசுபவர்கள் என்ற தலைப்பில் சேர்க்கப்பட்டது''

1951 சென்சசு அறிக்கை ''மொழிகள்'' பக்கம் 72.

உத்திரப் பிரதேசம் பீகார் மாநிலங்களிலும் ''மேல் நாட்டிந்தி. கீழ் நாட்டிந்தி பீகாரி என்ற முப்பிரிவுகளிலிருந்துஒன்றுக்கொன்றுததொடர்பில்லாத 11 வித இந்திகள் பேசப்படுகின்றன அவற்றுள் பீகாரியின் உட்பிரிவான' மைதிலி'' என்றமொழி

(13ஆம் பக்கம் பார்க்க)

சாதி வந்த விதம்

— கருமுத்து. தி. மாணிக்கவாசகம் செட்டியார்

நற்றிணை, குறுந்தொகை. அகப்புறநானூறு நூல்களில் சாதியைப் பற்றிக் குறிப்பிட வில்லை. கி.பி 4-6 நூற்றுண்டுகளில் களப்பிரர்காலத்தே சாதி பரவியிருக்க வேண்டுமென்று பலர் எண்ணுகின்றனர் இந்தியாவில் தவிர மற்ற நாடுகளில் சாதிகள் இல்லை என்ற கருத்தும் பரவலாக உள்ளது இது தவறு. உலக முழுவதிலும் சற்றேறக் குறைய இரு நூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தது.

ஆங்கில நாட்டில் இயந்திரப் புரட்சி வருமுன் ''கில்டு''–guild என்று சாதியைக் கூறினர்கள். ஒவ்வொரு தொழிலுக்கும் ஒரு வகுப்பு என்ற விதம்இருந்தது ''பட்லர்'' ''பார்பர்'' ''கோல் மென்'' என்ற பெயர்களே இதற்குச் சான்றுகளாகும்.

வரலாறு காணுத காலத்தில் சாதியு மில்லை சமயமுமில்லை. ஏன் ஒருநிலையான அரசாங்கமேஇல்லை. முதல்முதலில் மக்கள்உரிமையுடன்எவ்விதக்கட்டுப்பாடுகளுமின்றி காட்டில் வசித்து வந்தனர். அவர்களுக்குத் தேவைகளே இல. இவர்களைத்தான் நாம் குறவர்கள் என்று கூறுகிறோம். மலை நாடுகளில் வாழ்ந்த அவர்கள் சிறிது சிறிதாக நாகரிகம் அடைய முற்பட்டார்கள். பின்னர் இடை நிலமான (Valleys) பள்ளத்தாக்கில் சம வெளிகளில் குடியேறினர்கள். ஆடு மாடுகளை மேய்க்கத்தலைப்பட்டனர். இவர்கள் இடையர்கள் என்று அழைக்கப்பட்டனர் இரண்டுமலைகட்கும் இடையில் வசித்ததனுல் இடையரானுர்கள். ஆசை இல்லாது வாழ்ந்த மக்களுக்கு ஆசை ஏற்பட்டது. மாடுகளே முதலில் ஏற்பட்ட சொத்தாகின. மாடு என்றுலே செல்வம் என்று பொருள் படும். மனித சமுதாயம் வளர்ந்தது. நிலத்தைப் பண்படுத்தத் தலைப்பட்டான் மனிதன் உழுகின்ற தொழில் ஏற்பட்டு வேளாளர் சாதி தொடங்கியது. மாடு நிலம் வந்த பின் அவர்களுக்கு ஒருநிலையான வீடு அமைந்தது. மாடு மனை நிலம் எல்லாம் வந்தவுடன் இவர்களுக்குள் போட்டியும் பொருமையும் வந்தது இவைகளைத் தடுக்க ஒரு தலைவன் தேவைப்பட்டான் மன்னர் குலம் உருவாகியது மன்னர்கள் தங்கள் மக்களைக்காக்க ஊர் காவலரை வைத்தனர். பின்னர் அவர்களுக்குத் துணையாக ஒற்றரையும் வைத்தனர். மன்னர்கள் மறவர் என்றும், ஊர்காவலர் அகம்படியர் என்றும் ஒற்றர்கள் கள்ளர் என்றும் பெய பெற்றனர். மறம்கூறுவதால் மறவர் என்றும், அகம் காக்கின்ற திறத்தால் அகம்படியர் என்றும் கரந்து உறைவதால் கள்ளர் என்றும் பெயர் பெற்றனர். பின்னரும் மக்கள் சமுதாயம் முன்னேறியது. வாணிகம் பெருகியது. வணிகப்பெருமக்கள் தோன்றினர். அவர்கள் செட்டுடன் வாழ்ந்ததால் செட்டியார் என்று பெயா பெற்றனர்.

இவ்வாருக, குறவர் இடையர், வேளாளர் முக்குலத்தோர், செட்டியார் சாதிகள் தோன்றலாயின. இதன் பின்னும் சமுதாயம் வளர்ந்தது. கோவில்கள் கட்டப்பெற்றன கல்விச் சாலைகள் பெருகின. கோவில்களில் பூசை செய்யவும், கல்வி கற்றுக் கொடுக்கவும் ஒருவகுப்பாளர் நியமிக்கப் பட்டனர். அவர்கள்தாம் அந்தணர் எனப்பட்டனர்.

கல்வி கேள்விகளில் பெருக, சட்டமும் நிலை பெற வேண்டியிருக்க அரசனுக்குத் தானே எல்லாப் பொறுப்பையும் கவனிக்க முடிய வில்லை உரிமை பெற்ற சிலரை அவையிலே அமர்த்திக் கொண்டான். அவர்கள்தாம் பிள்ளை என்ற வகுப்பாளர்கள். பின்னர் அமைச்சர் குழு வரவேண்டியதாயிற்று, பிள்ளைகளில்முதல் யார்? என்று கேட்டு அவர்களை அமைச்சர் ஆக்கினுர் மன்னர். முதலியார் குலம் தோன்றியது; இவ்வாருக குலவகுப்பு முதல் அந்தணர் வகுப்பு வரை சமுதாயம் விரிந்தது.

எந்த நாட்டிலும் எல்லா மக்களும் ஒன்றுபோல் வளர்ச்சி யடைவதில்லை. அது போல, சமுதாயம் முன்னேறிக் கொண்டே போன போதிலும், அங்கும் பல ஏற்றத் தாழ்வுகள் காணப் பட்டன. தொழில்கள் பலவானவுடன் அதில் எது உயர்ந்ததொழில், எது தாழ்ந்த தொழில் என்ற எண்ணம் பரவ ஆரம்பித்தது. தம்முடைய அறிவுக்கூர்மையாலும்ஆற்றலினுலும்ஒருசிலர்செல்வர்களானுர்கள். இவர்கள் பிறரை அடிமைப்படுத்தி வாழவேண்டுமென்று எண்ணினர். சில சில தொழில்கள் ஈனமாகவும் கருதப்பட்டன. அவைகளைச் செய்பவர்கள் நாளடைவில் ஒதுக்கப் பட்டனர். மனிதன் என்று தன்னலத்துடன் வாழ ஆரம்பித்தானே அன்றே அவன் பிறரை ஒதுக்க ஆரம்பித்தான். இந்த ஒதுக்கப்பட்ட சமூகம்தான் பள்ளர் பறையா என்ற சமூகம். இவர்கள் தூய்மையாக இல்லை என்றுகூறிக்கோவில்களில் விட மறுத்தனர்; நாளடைவில் இவர்கள் சூத்திரர் என்ற சமுதாயமாக மாறினர். வேற்றுவர் நாட்டுப் படையெடுப்பும், அவர்களின் ஆட்சியும் இதற்குத் துணை புரிந்தன.

வள்ளுவர், புத்தர் காலத்தில் கொல்லா நெறி பரப்பப்பட்டது. அன்பின் அடிப்படையில் எழுந்த இந்த நெறி மக்களையும் பிரித்தது. சைவ உணவு உண்போர் மேலோர்என்றுகருதப்பட்டனர். அந்நாளில், உடனேயே மேல் சாதியாரான பிராமணர்கள், பிள்ளைகள், முதலியார்கள், செட்டியார்கள் சைவ உணவை மேற்கொண்டனர் சைவ உணவை உட்கொள்ள முடியாதவர்கள் இந்திய நாட்டின் சிறந்த பசுவை உண்பதை மறுத்தனர். ஆனுல் புலையர் என்றவகுப்பு மட்டும் இதனை விடவில்லை. ஆகையால் அன்பின் அடிப்படையில் எழுந்த இந்தநெறி மக்களைப் பின்னும் பிரித்தது இதனுல் தான் சுந்தரமூர்த்தி நாயனுரும், ''ஆவுரித்துத் தின்னும் புலையரேயெனினும், அவர் பரமன் அடியாரானுல், நான் வணங்கும் தெய்வம்'' என்றுர்.

அன்றுமுதல் இன்று வரை, பலவாயிரம் ஆண்டுகளானுலும், குறவர்குடி முதல் எல்லாக் குடிகளும் வாழ்ந்துதான் வருகின்றுர்கள். பச்சைமலை பவளமலை எங்களது நாடு என்று கூறும் குற மக்கள் அறிவியல் முன்னேற்றமுள்ள இந்த இருபதாம் நூற்றுண்டிலும் உள்ளனர்.

சாதி தொழிலால் துவங்கியது, அது நம்மை விட்டுப் போக வேண்டுமென்று எண்ணுகிறோம் இதற்கு ஒரே வழி தொழிற் பெருக்கம் தான் இன்றுஒரு தாய் வயிற்று மக்கள் ஒரே தொழிலைச் செய்வதில்லை தொழில் அடிப்படையில் நாம் இன்று பிரிந்திருக்கவில்லை ஆனுல் பழைய சமுதாயக் கட்டுப்பாடினுல் பிரிந்திருக்கிறோம். மணவினை ஒன்று தவிர மற்ற எந்த விதத்திலும் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இங்கு சிக்கல் இல்லை. சாதிக் கூச்சல்கள் ஏன் தமிழ் நாட்டிலகேட்கப்படுகின்றது என்ற கேள்விக்கு ஒரேபதில் பொருளாதாரச்சிக்கல் தான். விவேகானந்தர் கூறினர் ''இன்று கடவுள் இந்தியாவிற்கு வரவேண்டுமானுல் அவ ரொட்டியின் உருவில் தான் வர வேண்டும்'' வேலை வாய்ப்புகள் பெருகி விட்டால், தொழில் வளம் முன்னேறி விட்டால், விளைச்சல் மிகுந்து விட்டால் சாதியின் சுவடுகூடத்தமிழ் நாட்டில் தெரியாது. சாதிச் சிக்கல்களைப் பேசாமல் நாட்டைப் பற்றி எல்லோரும் நினைப்போமேயானுல் நம் சாதிகள் மறையும். இருட்டைப் போக்க விளக்கு வேண்டும். சாதி என்ற இருட்டைப் போக்க ஒரே விளக்கு, உழைப்புத்தான். இதனுல் தான் பாரதியார் ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப் போரை நிந்தனை செய்வோம்' என்றுர்.

நாடு முன்னேற நல்லவர்கள் சாதி சமயத்திற்கு அப்பாற்பட்டு. தன்னலம் கருதாது உழைத்தால் நம் நாடு முன்னேறும் என்று இன்று பேசப் படுகிறது. சாதி ஒழிய வேண்டுமானுல் நம் நாடு பொருளாதாரத் துறையில் முன்னேறினுலன்றி முடியாது என்பது தெளிவாகத் தெரிகிறது.

தொழிலால் இன்றுசாதியில்லை. எல்லா வேலைகளையும் எல்லோரும்செய்ய முன் வருகிறோம்- மறுக்கவில்லை ஆனுல் நம்மினத்தாருக்கு. வேலை, பதவி கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கும் வரை சாதிக் கொடுமை அகலாது

தொழில் வளம் பெருகி, நாடு அமெரிக்க நாட்டைப் போலச் செல்வத் திருநாடாக இருக்கும் போதுதான் இச்சாதிக்கு மதிப்பிருக்காது

மக்களாட்சியில் நம் நாடு சாதி, சமயம், என்பவைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டு வாழ வழி வகுக்க வேண்டுமானுல் எல்லோருக்கும் நிறைந்த கல்வி இருக்க வேண்டும்.

வைத்தான் செத்தான்! — திருக்குறளார் விழுப்புரம்.

அறிவுக்கும் பொருளுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது—அல்லது இருக்க வேண்டும் என்று எண்ணுதல் இயற்கை விதிக்கு மாறுபட்டதாகும்: அவ்வாறே கல்விக்கும் பொருளுக்கும், பணத்திற்கும், பொருந்திய சம்பந்தம் இருக்கவேண்டும் என்று இயல்பாக எண்ணுதல் கூடாததாகும் உலக இயற்கையில் அறிவும் கல்வியும் நிறையப் பெற்றவர்கள்தான் செல்வமும் நிறைந்தவர்களாக இருத்தல்வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். அவ்வாறு நினைத்துப் பார்த்தல் தவறு என்றும் சொல்லிவிடலாம்! ஏனெனில் மனித வாழ்க்கையில் அறிவு, கல்வி என்பவைகள் அமைகின்ற-வருகின்ற வழிவேறு: இரண்டும் ஒன்றாகச் சேர்ந்துதான் வருதல் வேண்டும் என்கிறவிதி - நியதி கிடையாது. இதனை "திருவேறு—தெள்ளியராதலும்வேறு" என்று ஆசிரியர் வள்ளுவர் காட்டும்குறிப்பிலிருந்து புரிந்துகொள்ளுதல் வேண்டும். அஃதாவது அறிவும்-செல்வமும் வெவ்வேறு வழிப்பட்டவைகளாகும். இரண்டும் சேர்ந்து இருப்பதுமுண்டே யென்று கண்டோமேயானால் அது அரிதாகத்தான் இருக்கமுடியும் என்பதாம்!

'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்கின்ற உண்மை வெளிப்படையானதாகும். பொருள் தேடுதல் வேண்டும். எனவே பொருளில்லாமல்-தேடவிரும்பாமல்-இவ்வுலகில், நம்மிடையே எப்படியேனும் வாழ்வோம் என்று இருப்பவர்களுக்கு இங்கு வாழ இடமில்லை; அப்படிப்பட்டவர்கள் வாழவும் இடம் தரக்கூடாது.

பொருள்தேடி வாழ்கிறவர்கள்—நிறையப் பெற்றிருப்பவர்கள்-எவ்வாறு வாழவேண்டும் என்கின்ற கருத்தினைச் சிந்திக்கும்போதுதான், அது பெரிய, "பிரச்சினை" ஆகுவிடுகிறது. இந்த உலகம் துன்பத்திலும்—மக்கள் தொல்லைகளிலும் இருப்பதற்குக் காரணமேஇப்படிப்பட்ட கருத்தினை மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ளாததும், புரிந்திருந்தும் அவ்வாறு நடந்துகொள்ளாததும், அவ்வாறு நடந்துகொள்ளாதவர்களை மக்கள் நடக்கும்படி செய்யாததுமேயாகும்.

தான் நன்கு அனுபவிக்கத்தான் பொருள்சேர்க்கின்றான். சேர்த்ததைஉண்டு, உடுத்தி இன்பமாக அனுபவிக்கத்தான் வாழ்கின்றான். அத்தனைப் பொருளையும் பத்திரமாக வைக்கின்றான்; வைத்தான்: காலம் வந்ததும் செத்தான்! எதைக் கண்டான்? ஏன் இவ்வாறு இருந்து மறைந்தான்? இவன் இவ்வுலகில்இருந்ததால் யாது பயன்? எதைச்செய்தான்? பணத்தைப் பத்திரமாக வைத்துக்கொண்டிருந்ததால் சாகாமலா இருந்தான்! இல்லையே! இப்படிப்பட்டவர்களையெல்லாம் ஆசிரியர் திருவள்ளுவனார் வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிட்டு உலகிற்கு அறவுரைகளைத் தருகின்றார். இப்படிப்பட்டவர்கள் இவ்வுலகில் வாழ்ந்த நாட்கள் அத்தனையும் இப்பூமிக்குப் 'பாரமாக' இருந்தார்கள் என்று கூறுகின்றார். **"தோற்றம் நிலக்குப் பொறை'**, என்றகுறளடிச்சொற்களைச் சிந்திக்கவேண்டும்.

இவ்வளவு அதிகச்செல்வமும் இவனிடம் வந்த காரணம் ஒருவன் மட்டும் வாழ்வதற்காகவா? அல்லவே! எப்படி எப்படியெல்லாமோ ஒருவன் நிறைந்த பொருள் பெற்றவனாகி விடுகின்றான். அவ்வளவும் தான் ஒருவனுடைய சொந்த முயற்சியால் தான் வந்தது என்று அவன் கூறுவது வெறும்பகட்டேயாகும்! இருக்கட்டும்: அவனிடம் இருக்கும்பொருள் அவன் அடைய வேண்டிய இசை (புகழ்) அத்தனையும் அவன் பெறுவதற்காக வல்லவோ துணை இருக்கவேண்டும். புகழ் வாங்க வேண்டியதொன்றுஅல்லவே! இயல்பாகவே வருமே இயல்பாக வருகின்ற வழிதான் 'ஈகை' என்பதனாலாகும். ஈகை என்பது பலருக்கும் வாரி, வாரி கொடுக்க வேண்டும் என்பதல்ல! நாட்டுக்கும் மக்களுக்கும் அப்பொருள் மிகவும் பயன்படும்படி செய்தலேயாகுமன்றோ! **'இசைவேண்டா ஆடவர்'** எதற்கு இவ்வுலகில் வாழவேண்டும் என்பது ஆசிரியருடைய கேள்வியாகும். குறிப்பாகவும் சுருக்கமாகவும் சொல்ல வேண்டுமென்றால் இவ்வுலகில் அதிகத்துன்பம் இருப்பதற்குக் காரணம், யார் யார் இங்கு வாழ்ந்திருக்கத் தேவையில்லையோ, அவர்களெல்லாம் இருந்து கொண்டிருப்பதினாலேயாகும் என்று கூறிவிடலாமன்றோ!

"எல்லாம் பணத்தினாலேதான்" என்று அடிக்கடி மக்கள் பேசுவதை நாம் கேட்டு வருகின்றோம் எல்லோருக்கும் பொதுவான கருத்தேயாகும் இக்கருத்து செல்வத்தினுடைய சிறப்பான உண்மையினை வெளிப்படுத்துவதாகும். எல்லாம் பணத்தினாலேதான் என்பதைச்சொல்லிக்கொண்டே யாருக்கும் எள்ளளவும் பயனுள்ளவனாக வாழாமல் இருக்கும் செல்வம் பெற்ற ஒருவனைஆசிரியர் மிக மிகக் கொடுமையாகவும் கண்டித்துப் பேசுகின்றார்:

"பொருளானும் எல்லாம் என்று
ஈயாது இவறும்
மருளானும் மாணாப்பிறப்பு"

அப்படிப்பட்டவனுடைய பிறப்பினையே நாம் சந்தேகப்படவேண்டியதாக இருக்கும் என்று சொல்லவிட்டாலும், அவனை மனிதப் பிறவிக்கு மிகவும் இழிவான பிறவியினைச் சேர்ந்தவன், உலகப் பேச்சில் வைத்துச்சொன்னால், "ஈன ஜென்மம் எடுத்தவன்" என்றே கூற வேண்டும்.

பயனில்லாத செல்வம்-மனிதப் பண்பாடு அற்றவனிடம் இருக்கும் செல்வம்-என்கிற கருத்தில். **"நன்றியில் செல்வம்"** என்றொருபகுதியினை ஆசிரியர் விளக்குகின்றார். இப்பகுதியில் காணப்படும் ஒவ்வொரு குறட்பாவினையும் பலமணி நேரம் சிந்தித்து உலகறியச் செய்ய வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். ஒருவனிடம் இருக்கும் நிறைந்த பொருள் அவன் தனி முயற்சியால் வந்துவிட்ட பொருள் என்று அவன் எண்ணுகின்ற எண்ணம் மாறவேண்டும், பல வாய்ப்புகளாலும் - பலர் சேர்க்கையினாலும்! - கால மாறுபாடு முதலியவைகளாலும் வந்ததுதான் அப்பொருள் என்ற எண்ணம் அவனுக்கு உண்டாகி உண்மையினை உணருவானேயானால் அவன் பலருக்கும் பயன்பட்டே தீரவேண்டும் என்கின்ற கடமையுணர்ச்சியினை பெரிய சட்டமாகவேக் கொள்ளுவான். தானும்மகிழாமல்பிறரும் பயன்படாமல் வைத்துச் செத்தானே!

"வைத்தான் வாய்சான்ற பெரும்பொருள்,
அஃது உண்ணான்,
செத்தான் செயக்கிடந்தது இல்!"

[இக்கட்டுரையினைக் குறிப்பாக வைத்துக் கொண்டு,குறட்பாக்களை நன்கு சிந்தித்துப் படித்து அறிதல் வேண்டும்]

தமிழும் வேலை வாய்ப்பும்

டாக்டர் வ. சுப. மாணிக்கம்.
எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்.டி.

நம் தாய்மொழியாகிய தமிழ் எல்லா வகையாலும் காலத்திற்கு ஏற்ப வளர வேண்டும் என்று விரும்புகின்றோம். இவ்விருப்பம் எல்லாத் தமிழர்க்கும் இருக்கின்றது. உரிமை பெற்ற இந்தியாவில் மழைக் காலத்துப் பயிர்போல நாட்டு மொழிகள் இயல்பாகவே வளர்ச்சி அடையும் இவ்வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்குத் தமிழ்த் திட்டங்கள் வேண்டும்.

உரிமை எனப்படுவது சிந்திக்கும் உரிமையாகும் உரிமைச் சிந்தனைக்குத் தாய்மொழியே நல்வாயில். மொழி காலத்திற்கு ஏற்ற வளர்ச்சி பெறுதபோது அம்மொழி பேசும் மக்கள் எங்ஙனம் சிந்தனை வளர்ச்சி பெறமுடியும்? பெற்றதாக நினைப்பதே சிந்தனை வளரவில்லை என்பதற்கு ஒரு சான்று

1. ஆட்சி மொழி

நன்முயற்சி:

தமிழின் வளர்ச்சிக்கு-பொதுவாகவே எம்மொழியின் வளர்ச்சிக்கும்-இரண்டு நடவடிக்கைகள் இன்றியமையாதவை. ஆட்சி மொழியாக்குவது ஒரு நடவடிக்கை. தமிழகத்தின் ஆட்சி மொழியாகத் தமிழ் இன்று பரவி வருகின்றது. எல்லாமாவட்டங்களிலும் பல்வேறுஅலுவலகங்களிலும் தமிழ்மொழி நடமாடுகின்றது ஆண்டுதோறும்புதிய புதியஅலுவலகங்களில் தமிழ்ஆட்சி இடம் பெறுகின்றது. இன்று செல்லும் ஆட்சிமொழி வேகத்தை கணித்தால் இன்னும் நாலைந்தாண்டுகளில் தமிழகத்தின் சிறிய பெரிய வினைக்களங்கள் எல்லாமே தமிழன்னையின் இல்லங்களாக விளங்கக் காண்போம்.

அரசின் பெருமை:

நம் அரசினர் தமிழே தமிழகத்தின் ஆள்மொழி என்ற குறிக்கோளிற் சிறிதும் பின்வாங்கவில்லை. அதற்கென ஒரு குழுவை வலம்பட அமைத்தும், ஆட்சி மொழிச் சொற்களை ஆக்கி வெளியிட்டும், தமிழ் தெரியாத அலுவலாளர்கட்குத் தமிழ் கற்பித்தும், குறிக்கோள் நிறைவேற ஆவன வெல்லாம் அரசினர் செய்கின்றனர். ஆரவாரம் சிறிதும் இன்றி ஆட்சிக் களங்களில் தமிழை விதைக்கும் அரசினரைப் பாராட்டுகின்றேன். தமிழ்மொழியாட்சி எத்துணையோ பெரு நன்மைகளைத் தமிழ் மக்கட்குத் தரும் என்பது என் நம்பிக்கை. ஆதலின் நம்மரசு வழிவழிப் பாராட்டுக்கு உரியதாகும்

2. பயிற்று மொழி

அரசின் முயற்சி:

தமிழ் வளர்ச்சிக்கு வேண்டும் பிறிதொரு நடவடிக்கை தமிழைக் கல்விமொழியாக்குவது. தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழகத்தில் தமிழே பயிற்று மொழியாக வேண்டும். கொள்கையளவில் இஃது எல்லார்க்கும் உடன்பாடு. இக்குறிக்கோள் வலுப்படு முறையில், தமிழக அரசு தக்காரைக் கொண்டு கலையியல் நூல்களைத் தமிழில் விரைந்து வெளியிட்டு வருகின்றது. நூலாசிரியர் குழு என்னும் ஒருபுதிய நிலையத்தை தமிழ் வளர்ச்சிக்கென அரசு துவங்கியிருப்பதை மிகவும் வரவேற்கின்றேன். ஆண்டிற்கு நன் முறையில் ஒரு நூறு நூல்கள் வருமாறு இம் முயற்சி வளரும் என்று நம்புகின்றேன் கல்லூரிகளில் பொருளியல், அரசியல், உளவியல், வரலாறு முதலான கலைத்துறைகளைத் தமிழிற் கற்பிக்க அரசினர் பேராதரவு நல்குகின்றனர். இத் தமிழ்த்துறை வகுப்புக்களில் படிக்கும் மாணவர்க்குக் கட்டணம் இல்லை; விடுதி வாழ்வுக்குப் பொருளுதவியும் உண்டு என அரசு வேண்டிய சலுகைகள் செய்யப் பார்க்கின்றோம். தனியார் கல்லூரிகளிலேயன்றி, அரசினர் கல்லூரிகளிலும் இத்தமிழ்த்துறை வகுப்புக்கள் நடைபெறும் என அரசு அறிவித்திருக்கின்றது. அரசினரின் ஆதரவு ஐயப்படுவதற்கில்லை.

கேலி செய்யாதீர்:

தமிழ் பயிற்று மொழியாவதற்கு இவற்றுக்கு மேலும் இனி என்ன செய்ய வேண்டியிருக்கின்றது என ஒரு சாரார் கேட்கின்றனர் அரசே முன்னின்று தாங்கி இவ்வளவு உதவிகள் செய்த பின்னும். மாணவர்கள் தமிழிற் பயில வரவில்லை யென்றால் தமிழ் பயிற்றுமொழியாவதை இளைஞர்களும் பெற்றோர்களும் விரும்பவில்லை; ஏன்? பயனில்லை என்பதுதானே கருத்து என ஒரு சாரார் கருதிக்கொள்கின்றனர் ஆங்கிலத்திற் பயில்வதையே விரும்புகின்றனர் என மேலும் பொருள் கொள்கின்றனர் படிப்பாரும் படிக்க வைப்பாரும் விரும்பாத நிலையில், தமிழைப் பயிற்று மொழியாக்கப் பார்ப்பது வீண்.முயற்சி வீண் செலவு என்று ஒரு சாரார் குடியரசு நாட்டில் கூறவும் முற்பட்டுள்ளனர். தமிழ்நாடு வளமற்ற, தொழிலற்ற நாடு எனவும், தமிழக மக்கள் தம் பொருளாதார வாழ்வு செழிக்க இந்தியாவின் பிற பகுதிகளுக்குப் போய் வேலை பார்க்க வேண்டியுள்ளது எனவும் தமிழிற் படித்தால் பிற பகுதிகளில் வேலை கிடைக்குமா எனவும் ஒரு சாரார்வாழ்வு பேசுகின்றனர். தமிழ் வழிக் கல்விக்கு மாணவர்கள் சேரவில்லை என்பதைக் கண்டு ஒரு சிலர் மகிழ்ச்சி அடைவதையும். ஒரு சில செய்தித்தாள்கள் கிண்டல் செய்வதையும் நாம் அறியாமல் இல்லை. தமிழகத்தில் தமிழிற் கற்பிப்பது என்ற அரசின் தூய கல்விக் கோட்பாட்டை எப்படியேனும் அசைத்து விட வேண்டும் என்று ஒரு சிலர் பாடுபடுவதையும் நாம் உணராமல் இல்லை.

இக்கேலியும் கிண்டலும் கடைபோகா என்பது வரலாறு காட்டும் உண்மை. ஆங்கில ஆட்சியை ஒழிக்க எழுந்த பாரத விடுதலைப் போரின் தொடக்கத்து எத்துணைப் பேர் சேர்ந்திருப்பார்கள்? அன்று கேலி செய்தோரே ஏராளமானவர். பெருங்கடமைகள் சிறிது சிறிதாகத்தான் நிறைவேறும். நல்ல குறிக்கோளுக்கு நாள் பல ஆகும் நாள் ஆக ஆகச் சிலர் பலர் ஆகிவிடுவர். தாய்மொழிக் கல்விக் கொள்கையைக் கேலி செய்பவர்கள் அன்று தாய் நாட்டு விடுதலையைக் கேலி செய்தவர்களோடு ஒப்பாவர். இந்திய நாடு உரிமை வளர வேண்டிய நாடு. உரிமைச் சிந்தனையை எல்லா மக்களிடமும் வளர்க்க வேண்டிய குடியரசு நாடு. குடியரசு நாடு என்பது பொருளாதாரச் செழிப்பு மட்டும் உடைய நாடு அன்று; சிந்தனைச் செழிப்பும் உடைய நாடு. சிந்தனையில் உரிமை தாய்மொழியிற் சிந்தித்தாலன்றித் தோன்றாது. பொருளாதாரப் பூச்சாண்டியைக் காட்டி இந்திய நாட்டு மொழிகளின் வளர்ச்சியைத் தடுப்பவர் குடியரசையே தடுப்பவர் என்பது தெளிவு இவ்வளவு உதவிகள் செய்தும் தமிழ் பயிற்று மொழிக்கு மாணவர்கள் ஓடி வரவில்லை யென்றால் இன்னும் என்ன உதவிகள் செய்ய வேண்டும், வழிகளைக் கடைப் பிடிக்க வேண்டும் என மேலும் ஆராய்வதே நம் கடமை

குறள் நெறி

தமிழ் வாழ்க

தம்பொருள் என்ப தம்மக்கள் அவர் பொருள்
தந்தம் வினையால் வரும்

கலைக்கூடம் கொலைக் கூடமாய கொடுவினை

மாடமலி கூடலம்பதியில் மணிநகரத்தில் சரசுவதி பள்ளிக்கூடக் கட்டிடம் இடிந்து சரிந்து எழிலுறு கலைச் செல்வியர் பலர் உயிரை எளிதே கொள்ளை கொண்ட கொடுவினை நிகழ்ச்சி உள்ளுவார் உள்ளங்களை உருக்கி வருத்துவதாகும். தேர்வுக்கு ஆயத்தம் பெறச் சென்றோர் திரும்பி வந்திலரே என்று தேம்பித் தேம்பி அழுதோர் காட்சி நினைப்பினும் நெஞ்சு பிளக்கும். தலைவாரி பூச்சூடிப் பொட்டிட்டு, அழகுற உடுத்தி அணைத்து முத்தமிட்டு "அன்பே போய்வா" என்று அன்பு பொதி மொழி கூறிச் செலவிடுத்த அன்னையர் உள்ளங்கள் என்னபாடுபட்டிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்கவும் இயலாது உண்பதற்கு எடுத்துச் சென்ற உண்கலன்கள் உணவோடு ஒருபால் சிதறிக்கிடக்க உண்ணவிருந்த பச்சிளம் பாவைகள் படுபிணமாய்ப் பாரில் இடிபாடுகளுக்கு இடையே பரவிக்கிடந்த துயர்மிகு காட்சியை அம்மம்ம நினைக்கவும் உள்ளம் அலமருகின்றது. அந்தோ! அருங்கலைச் செல்வியர், அருள்மிகு ஆசிரியர், தெருள்மிகு ஆட்சித் தலைவியர் பலரை நாடு இழந்துவிட்டது. பலவகையாலும் தம்மை இன்புறுத்தும் மக்களைப் பெற்றோர் இழந்துவிட்டனர்.

இழந்து வருந்தும் பெற்றோர்க்கும் ஏனையோர்க்கும் எம் உளமார்ந்த ஆறுதல்களை ஆருத் துயரத்துடன் அறிவித்துக்கொள்கின்றோம்.

இக்கொடுவினை நிகழ்ச்சி இன்தமிழ்நாட்டில் நிகழ்ந்தது இதுவே முதலாவதாகும். இதுவே கடைசியானதாகவும் இருத்தல் வேண்டும்.

இக்கொடுவினை நிகழ்ச்சிக்குரிய பொறுப்பை ஆட்சியாளர்தாம் ஏற்றல் வேண்டும். நாட்டு மக்களுக்குக் கல்வியளிக்க வேண்டியது அரசின் கடமையாகும். அரசு தனக்குரிய கடனைத் தனிப்பட்டவரிடம் ஒப்படைத்துள்ளது. கல்வி நிலையங்களைத் தோற்றுவிப்பவர்களில் பலர் மக்களுக்குக் கல்வியறிவை யூட்டவேண்டு மென்ற உயர்நோக்கினைக் கொண்டுள்ளனர் என்று கூற இயலாது. விரைவில் மிகு உழைப்பின்றிப் பொருள் ஈட்டுவதற்குத் துணையாகக் கல்வி நிலையங்களைத்தோற்றுவித்து நடத்தலை மேற்கொள்கின்றனர்.

அதனால்தான் மாணவர் நலனையோ, ஆசிரியர் வசதியையோ, கல்வி முன்னேற்றத்தையோ கருதிப் பாரர்து கல்விக் கூடங்களை நடத்துகின்றனர். அருள் நோக்குடன் அனைவர்க்கும் கல்வியளிக்க வேண்டிய நிலையங்கள் பொருளீட்டும் வாணிப நிலையங்களாக மாறியுள்ளன. அமர்வதற்கு ஏற்ற இருக்கைகள் இல்லாதனவும், வகுப்பறைகட்குரிய தடுப்புகள் இல்லாதனவும் ஆசிரியர்க்குத் திங்கள் கணக்கில் ஊதியம் அளிக்காதனவும் ஆய கல்விக்கூடங்கள் பல உள. இக்கல்விக்கூடங்களைத் தொடங்கியுள்ளோர் இவைகளைத் தொடங்குவதற்கு முன் பெற்றிருந்த பொருள் நிலையும் தொடங்கிச்சில ஆண்டுகளில் பெற்றிருக்கும் பொருள் நிலையும் கணக்கெடுப்பின் பள்ளிக்கூடங்கள் எவ்வாறு வாணிப நிலையங்களாகப் பொருள் ஈட்டும் கூடங்களாகப் பயன்படுகின்றன என்பது தெள்ளிதிற் புலனாகும். ஆட்சியாளர்க்கு இவ்வவலநிலை தெரியாது என்று கூறுதல் பொருந்தாது. அறிந்தும் அறியாதவர் போல் இருக்கின்றனர் என்றுதான் கருத வேண்டியுள்ளது.

நாட்டில் நற்கல்வி பரவ வேண்டுமானால், மாணவச் செல்வங்கள் சீருறப் போற்றப்பட வேண்டுமானால், ஆசிரியமணிகள் அன்பாக வணங்கப்பட்டுப் பேணப்பட வேண்டுமானால், மணிநகரக் கொடுவினை நிகழ்ச்சி நடைபெறாது தடுக்கப்பட வேண்டுமானால் தொடக்கக் கல்விக் கூடங்களையாவது அரசே ஏற்று நடத்தல் வேண்டும்.

பயிற்சிப் பள்ளிக்கூடங்கள் பெரும் பொருளீட்டும் நிலையங்களாகப் பயன்படுத்தப்படுதல் நாடு அறிந்த ஒன்றாகும். ஆதலின் அதனையும் தனியாரிடமிருந்து எடுத்து அரசே நடத்துதல் வேண்டும்.

இவைகட்கு அரசே பொருட்கொடை நல்கி உதவுவதனால் இவைகளை ஏற்று நடத்துவதனால் மிகு பொருட்செலவு ஏற்படாது. மக்களாட்சி மாண்புறவும் நல்ல குடிமக்கள் தோன்றவும் துணை புரியவல்லது கல்வியாய் இருத்தலின் கல்விக்குச் செலவிடுவதைப் பற்றிக் கவலை கொள்ளல் நல்லரசுக்கு ஏற்றதன்று.

இன்று கலைக்கூடங்களில் பலக் கொலைக் கூடங்களாகவே உள்ளன; நற்கல்வி, உயர் பண்பு, நேர்மை, உடல் நலம், உளநலம் முதலியன வளர்க்கப்படாமல் அழிக்கப்படும் நிலையங்களாகவே உள்ளன. எனின் மறுத்துரைப்பது எளிதன்று. ஆதலின் ஆட்சியாளர் கல்வித் துறையில் தனி நோக்குச் செலுத்தி உயர்கல்வியை மக்கட்கு அளிக்கும் தொண்டில் செம்மை பெற வேண்டுகின்றோம். மணிநகரக் கொலை நிகழ்ச்சி மாநிலத்தில் என்றும் தோன்றாதவாறு செய்வது அரசின் தனிப்பெருங் கடமையாகும். வளர்க கல்வி நலம்; வாழ்க நல் அரசு.

நாகசுர இசைச் செல்வர் நம்மை விட்டுப் பிரிந்தார்

நாகசுர இசைச்செல்வர் காருகுறிச்சி அருணசலம் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். பரதகண்டத்திலும் பக்கத்தில் உள்ள இலங்கையிலும் தம் நாகசுர இசைத்திறனால் பல்புகழ் கொண்டு பரிதி போல் விளங்கினர். அவருக்கு ஒப்பாரும் மிக்கர்ரும் இலராய் இன்னிசையமுதத்தை யாவரும் கேட்டின்புற்றுக் குருவினும் மிஞ்சிய மாணவர் என யாவராலும் பாராட்டப் பெற்றார். இனிமையும் எளிமையும் பண்பும் மிக்க நண்பராய், இசைப் புலமையறிஞராய் நாட்டார் உள்ளங்களில் நல்லிடம் பெற்ற இவர், இன்னும் நெடிதுவாழாது பிரிந்தது இசையுலகிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

தமிழர்க்கே யுரிய நாகசுர இசைச் சிறப்பை நானில மெங்கும் பரப்பும் நற்றொண்டில் ஈடுபட்டு அயல்நாடுகளுக்குச் செல்ல இருந்த இவர், அந்தோ அகன்றுவிட்டாரே. அவரைப் பிரிந்துவருந்தும் அவரது குடும்பத்தார்க்கும் அன்பர்க்கும் எம் உளமார்ந்த ஆறுதல் மொழிகளை அறிவித்துக் கொள்கின்றோம்.

நாகசுர இசை இவர் போலும் நற்பெரும் வல்லுநரைப் பெறுவது என்னாளோ?

தமிழக மேலவைத் தேர்தலில்
வெற்றிபெற்றுள்ளோரைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சென்னை மாவட்டப் பட்டதாரித் தொகுதி:

டாக்டர் ஆர்க்காடு இலக்குமணசாமி முதலியார்
டாக்டர் ஆண்டே

டாக்டர் முதலியார் அவர்கள் மேலவையில் எதிர்க்கட்சித் தலைவராக இலங்கி அவ்வப்போது அரசுக்கு வேண்டும் அறிவுரைகள் இடித்துரைத்துத் தமிழக நலனைக் காத்துவருகின்றனர்.

இடிப்பாரை இல்லாத ஏமரா அரசு
கெடுப்பாரிலானும் கெடுமன்றோ?

வட ஆர்க்காடு தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி;

டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள்
மீண்டும் ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். ஆசிரியர் நலனையும் தமிழ் நலனையும் காத்துப் போராடிவரும் நல்லறிஞர்.

ஆட்சி மன்றத் தொகுதிகள்.

மதுரை மாவட்டம்:
திரு என். ஆர் தியாகராசன்
திரு அ. சிதம்பரநாத முதலியார்

திருநெல்வேலி மாவட்டம்
திரு. சி. பா. ஆதித்தனார்
திரு. சிவசுப்பிரமணிய பாண்டியன்

கோயம்புத்தூர் மாவட்டப் பகுதி:
திரு. கே. கே. கோதண்டராமக் கவுண்டர்
திரு. கே துரைசாமிக் கவுண்டர்

அனைவர்க்கும் எம் உளமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எக்கட்சியினராயினும் இன் தமிழைக் காத்துக் குறள் நெறியில் மக்களை வாழச்செய்து நல்லின்பம் பெறத்துணை புரிவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

அனைவரும் வாழ்க பல்லாண்டு.
வளர்க நல்லாட்சி.

திருவள்ளுவர் நினைவுநாள்

திருவள்ளுவர் திருஉருவப்படத்தை தமிழ்நாட்டின் ஆட்சி மன்ற அவையில் குடியரசின் துணைத்தலைவரைக்கொண்டு திறந்து வைத்த தமிழக அரசு அவர் பெயரால் ஆண்டில் ஒருநாள் விடுமுறையும் அமைத்தல் மிகமிக பொருத்தமானதாகும். சட்டமன்றில் திருவள்ளுவர் பெயரில் அவர் நினைவுக்காக விடுமுறை விடவேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டபோது "பார்ப்போம்" என்று முதலமைச்சர் பகர்ந்ததாகச் செய்தித்தாளில் கண்டோம். யார் யாருக்கோ எது எதற்கோ விடுமுறைவிடும் அரசு திருவள்ளுவர்க்கும் அவர் நினைவாக விடுமுறை விடுதலால் ஒன்றும் குறைந்துவிடாது, மாறுக வள்ளுவர்பால் நாம் காட்டும் மதிப்பும் இன்னும் உயரும். ஆகவே திருவள்ளுவர் பெயரால் விடுமுறை நாள்விட்டு அந்நாளைத் தேசியப் பெருநாளாகக் கொண்டாடுவதற்குத் திட்டங்கள் வகுக்கவேண்டும் என்று தமிழக அரசை அன்போடு வேண்டுகின்றோம். தமிழ்நாட்டில் மட்டுமன்றி ஏனைய மாநிலங்களிலும் திருவள்ளுவர் நினைவாக விடுமுறை விடச் செய்தல் இன்னும் சிறப்புடைத்தாகும். இவ்வாறு செய்வது இந்திய ஒருமைப்பாட்டுக்கு வழிகோலியதும் ஆகும். உலக ஒருமைப்பாட்டை வலியுறுத்திய வள்ளுவர் பெருமானுக்கு நாம் எது செய்தாலும் தகுமன்றோ!

மதுரையில் அமையவிருக்கும் பல்கலைக் கழகத்திற்கு அப்பொய்யில்புலவர் பெயரையே சூட்ட வேண்டுமென்று மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

வள்ளுவர் புகழ்பாடி வையக உறவு கொள்வோம்.

சாதிப் பட்டங்கள்

"சாதிவேற்றுமைகள் வேண்டாம்" என்று கூறும் குறள்நெறியில் பெயர்கட்குப் பின்னர் சாதி குறிக்கும் பட்டப் பெயர்களை எழுதுதல் பொருந்துமா? என்று சில அன்பர்கள் எழுதியுள்ளனர். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற பெருநெறி பரவி, இன்று தொல்லை கொடுத்துவரும் சாதிகள் அனைத்தும் மறைந்து ஒழியவேண்டும் என்பது தான் நமது குறிக்கோள். ஆனால் இதனைக் கட்டாயப்படுத்திச் செய்தல் இயலாது. அவரவரும் உளம் மாறுதலடைந்து தம் சாதியை மறந்து ஒழுகும் நிலை ஏற்பட வேண்டும். ஆதலின் அவரவர் தம் பெயர்கட்குப் பின்னால் சாதிப்பட்டங்களைச் சேர்த்துக் கொள்ளலைத் தாமாகவே நீக்கிக்கொள்ளல் வேண்டும். அன்றியும் பலர் சாதிப்பட்டங்களைச் சேர்த்தே தம் பெயர்களை வழங்கிவிட்டதனால், சாதிப்பட்டத்துடன் கூறினால்தான் தம்மை உலகம் அறியும் என்று கருதுகின்றனர். அஃதும் சரிதான். சாதிகள் உள்ளவரை சாதிப் பட்டங்களைப் பயன்படுத்துவதைக் குறைகூற இயலாது. ஆனால் உள்ளத்தில் சாதிவெறி இல்லாமல் இருந்தால் போதுமானது. ஆகவே அன்பர்கள் 'குறள் நெறி'யில் பெயர்கட்குப் பின்னர்ச் சாதிப்பட்டங்களைச் சேர்த்தலை எம்பிழையாகக் கருதுதல் கூடாது.

"சாதிகள் இல்லையடி பாப்பா, தாழ்ச்சிஉயர்ச்சி சொலல் வேண்டாம்" என்பதுதான் 'குறள் நெறி'யின் குரலுமாகும்.

செய்திகள்....

பாண்டிக்குடி – தி. வ. 2. 1995 – மாசி . 20.

திருக்குறள் நெறியில் வாழ்வது என உறுதி பூண்டு "குறள் நெறி" இயக்கக் கிளையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

தலைவர் : குழ . வள்ளுவன், பி. ஏ.,
துணைத்தலைவர்கள்: திரு. சா. பஞ்சநதீசுவரன்
மு. கருப்பையா
செயலாளர்கள் : ந. கருப்பையன்
உதயகுமார்
பொருளாளர் : ஆ. திருப்பதி

செயற்குழு உறுப்பினர் ஐவர்

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மாலையில் திருக்குறள் வகுப்பு கீழமங்கலம் தமிழாசிரியரைக் கொண்டு நடத்துவது என்றும் திங்கள்தோறும் இறுதி ஞாயிற்றுக்கிழமையில் திருக்குறள் சொற்பொழிவுகள் நடத்துவது என்றும் சித்திரைத் திங்களில் இலக்கியத் தொடக்கவிழாவைப்பேராசிரியர் இலக்குவனாரைக்கொண்டு நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

———

இலட்சுமிநாயக்கன்பட்டி 10–2–64ல் "குறள் நெறி" இயக்கக்கிளை இவ்வூரில் அமைக்கப்பட்டது.

தலைவர் : திரு. மு. பொன்னையா,
செயலாளர் : மங்கை கிருட்டிணசாமி
செயற்குழுவினர் : திரு. வீ. கிருட்டிணசாமி, திருமதி. செயலெட்சுமி, திரு. பொன்னையா சிவசங்கரன், திரு. வாசுகி, நாகலெட்சுமி, இராமசாமி, துரைராசு.

ஞாயிற்றுக்கிழமைதோறும் குறள்நெறிக் கூட்டம் நடத்துவது என்றும், குறள்நெறிக் கொள்கைகளை பரப்புவதற்கு ஆவன செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.

———

நக்கீரர் கழகம்:

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி

(தொடக்கம் 1944)

மேற்படி தமிழ்க் கல்லூரி கோடை விடுமுறைக்காக 1964 மார்ச்சுத்திங்கள் **22ஆம் நாள்** முதல் **சூன் 11ஆம்** நாள் வரை விடுமுறை விடப்பட்டது. மீண்டும் சூன் திங்கள் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு வழக்கம்போல் வகுப்புகள் தொடங்கப்பெறும்.

வித்துவான் புகுநிலை, வித்துவான் முதனிலை, வித்துவான் நிறைநிலை வகுப்புகள் தொடர்ந்து நடைபெறும். சுமார் 18 தமிழ் ஆசிரியர்கள் அன்புப் பணி ஆற்ற ஆர்வமுடன் இசைந்து கடந்த ஆண்டுகள் போல் இவ்வாண்டிலும் தொடர்ந்து பணிபுரிவார்கள்.

1964 மார்ச்சுத்திங்களில் நடைபெற்ற பல் கலைக்கழகப் புகுநிலை, முதனிலை, நிறைநிலை தேர்வுகளுக்குச் சென்று வெற்றிபெற்ற மாணவர்கள் முதல்தர மாணவர்களாக எமது கல்லூரியில் விளங்குபவர்களுக்குப் **பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுப் பதக்கங்கள்** வழங்கப்பெறும்.

இடம்: **ஏ. ஆர். சி. மகளிர் உயர் பள்ளி, 44, பவழக்காரத் தெரு, மன்னடி, சென்னை-1.**

"குறள் நெறி" இதழ் வளர்ச்சிக்கு உதவி நன்கொடை.

திரு. இரா. சோதிமணி, M. A., சென்னை. 5-00.
„ அறந்தாங்கி மாணவர் ஒருவர் 2–00.
,, பூ. சந்தி வீராசாமி — 1–00.

நன்கொடையாளர்கட்கு எம் உளமார்ந்த நன்றி.

செயலர்.

———

பாடல்கள், கட்டுரைகள் வரைவோர் நினைவுக்கு.

காலத்தொடு பொருந்த மக்கள் உள்ளங்களில் கிளர்ச்சியைத் தோற்றுவிக்கும் இயல்பினவாய் இனிய எளிய செந்தமிழில் எழுதப்பட்டுள்ளன வற்றிற்கு முதலிடம் கொடுக்கப்படும். எழுது வோர், தாளின் ஒரே பக்கத்தில் தெளிவாக மையால் ஐந்து பக்கங்கட்கு மேற்படாமல் எழுதுதல் வேண்டும். வெளியிடப்படாதன விரைவில் திருப்பி விடுக்க இயலாது ஆதலின் படியொன்று வைத்துக்கொண்டு அனுப்புதல் நன்றாகும்.

பாடல்களும் கட்டுரைகளும் மிகுதியாக வருகின்றமையின் அவற்றினைத் தேர்ந்தெடுத்து வெளியிடக் காலத்தாழ்வு ஏற்படும் ஆதலின் தம் முடையது உடனே வெளிவந்திலதே என்ற ஏங்குதலைத் தவிர்த்துப் பொறுத்தருள்க.

——

குறள்நெறி இயக்கக் குழு

அன்புடைய குறள் நெறி' ஆசிரியர் அவர் கட்கு வணக்கம் பல.

ஐயா!

நான் புலவர் கல்லூரியில் (மேலைச்சிவபுரி) பயின்று வருகிறேன். உலகம் போற்றும் திருக்குறளின் உயர்ந்த நெறியை மக்களிடத்தே பரப்ப விழையும் உங்கள் முயற்சி வெல்வதாக! என்னுடைய பெருமுயற்சியால் எங்கள் ஊரில் ஒரு "குறள்நெறி இயக்கக் குழு" அமைக்க விருக்கிறோம். அதில் என்னைத்தான் தலைவராக்க முடிவு செய்துள்ளனர். வாராவாரம் திருக்குறள் சொற்பொழிவு செய்யவும் முன்வந்துள்ளோம். குழு அமைத்த பிறகு அதன் விவரங்களைக் 'குறள்நெறி' இதழ்க்கும் ஏனைய செய்தி இதழ்க்கும் அனுப்ப இருக்கின்றேன்.

"நான் உறுதியாகக் குறள் நெறியில் வாழ்வேன்" என உறுதி பூண்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,
ப. முத்துச்சாமி,
தெற்கு அய்யம்பாளையம்,
கடலூர், திருச்சி மாவட்டம்,

——

குறள் நெறியாளர் மகாநாடு

திருக்குறள் நெறியைத் தெருவெல்லாம் பரப்பி மக்களை நல்வாழ்வு வாழுக செய்வதற்குரிய திட்டங்கள் தீட்டக் குறள்நெறியாளர் மாநாடு மதுரையில் 'மே'த் திங்களில் நடைபெறும். கலந்துகொள்ள விரும்புவோர் தம் விருப்பத்தை அறிவிக்குமாறு வேண்டப்படு கின்றனர்.

செயலர்,
"குறள்நெறி", மதுரை-6.

(15—3—64 இதழின் தொடர்ச்சி)

திருக்குறளில் உருவகம்

— பேராசிரியர் வீ. ஒப்பிலி

வெள்ளத்தைப் போல் நீருக்கடியில் உள்ள பாறையும் தீங்கின் சின்னமாகிறது. உள்ளதை மறைப்பாரின் 'இல்லை' என்ற சொல் நீரினுள் பாறையாகிறது.

இரவென்னும் ஏமாப்புஇல் தோணி
கரவென்னும்
பார்தாக்கப்பக்கு விடும். (1068)

ஊர்நடுவேயுள்ள குளத்து நீர் ஈவாரின் செல்வத்திற்கு உருவகமாகிறது. ஈயாது செல்வத்தைச் சேர்ப்போரின் உள்ளம் இக்குறளில் பாறையாக மாறிவிடுகிறது. இரத்தல் உடைந்த மாக்கலம்; இரந்து வாழ்பவன் இறைவனின் திருவடியைப் பற்ருது, உடையும் மாக்கலத்தைத் துணை கொண்டு, பிறவிப்பெருங்கடலைக் கடக்க முயலுகிருன். அவன் வாழ்க்கையில் நேரும் தீங்குகளை நீக்கவியலாது. கடல் உருவகமும், பாறை உருவகமும், மரக்கல உருவகமும் இணைந்து இக்குறளைச் சிறப்பிக்கின்றன. "ஏமாப்பு இல்தோணி" இரவச்சம் என்ற காவல் இல்லாததோணி; உருவக முறையில் ஆராய்ந்தால், இது "இறைப்பற்று என்ற காவல் இல்லாத தோணி"யாகவும் மாறுகிறது. காமம் அளவற்றுப் பெருகி கடலுருக்கொள்ளும் போது தனிமையில் வருந்தும் தலைவி, காக்கும் தோணியான காதலனன்பைக் காணுது, வருந்துகிருள். வறுமையும் இவ்வாறு அளவற்றுப்பெருகும்போது, சுற்றத்தாரின் ஆதரவென்னும் கரை காணவியலாத மனிதன், கண்ணில் தோன்றும் எளிய மாக்கலத்தில் ஏறி, பிறவிக்கடலை நீந்த எண்ணுகிருன்! அன்பற்ருரோடு காமத்தில் ஊடுபவன் இழுத்துச் செல்லும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படுகிருள்; இவ்வாறே இரந்து வாழமுயலும் மனிதனின் இரவென்னும் மரக்கலமும் கரவெனும் பாறை தாக்க உடைந்துவிடுகிறது. காமவயப்பட்ட காதலிக்குத் தோணி (துணை) இல்லை; இரப்பவனின் தோணியோ பயனில்லை. இவ்வாறு காமமும் இரவும் நிறைந்த வாழ்க்கை ஆரவாரமிக்க பெருங்கடலுருக்கொள்கிறது; அல்லது எல்லாப் பொருட்களையும் தன்னகத்தே இழுத்துச் சென்று அழிக்கும் வெள்ளமாகவும் உருவெடுக்கிறது.

நீரும் நிழலும் அடுத்தடுத்து இருப்பவை. இனிய பொழில் நீரும், நிழலும் நிறைந்து மனதிற்கு இன்ப மூட்டுகிறது.

நீரும் நிழலும் இனிதே. புலவியும்
வீழுநர் கண்ணே இனிது (1309)

நீர் ஊடலுக்கு உருவகமாகவும். நிழல் அன்பிற்கு உருவகமாகவும் இங்குப் பயன்படுகின்றன. அன்புடன் காக்கும் தன்மையுடையோர் யாவரும் துன்பமென்ற வெயிலில் நாம் புழுப்போல் துடிக்கையில் காக்கும் நிழலுருக்கொள்கின்றனர். இவ்வாறு நீரும் நிழலும் இனிமையின் உருவகங்களாகின்றன. இருப்பினும் அவை நோய்தரலாமென்பதையும் சொல்கிருர் திருவள்ளுவர்!

நிழல் நீரும் இன்னுத இன்னுதமர் நீரும்
இன்னுவாம் இன்னுசெயின் (881)

நோய் உண்டாக்கும் நீரும் நிழலும் தீயனவே. ஆதலால் அவை சுற்றத்தாரின் உட்பகைக்கு உருவகங்களாகின்றன. இக்குறள் இனிய 'மணி நீரும்' 'அணி நிழலும்' பார்வையளவில் இனிமையர்கவும், நுகர்ச்சியில் தீமையாகவும் மாறுவதைக் காட்டுகிறது. நீரும் நிழலும் தமது இனிய தன்மையை இழத்தலைக்காட்டுகிறது இக்குறள். சுற்றத்தார் சுற்றம் மறந்து உட்பகையோடிருத்தல் இயற்கைக்கு முரணுனதல்லவா? இவ்வாறே, மழை அமிழ்தமாயினும், மண்ணின் கண்ணுள்ள நீர் சேர்க்கையால் மாறிவிடும் தன்மையது. நீரும் நிலமும் பிரிக்கவியலாது கலத்தல் அன்பால் ஒன்றிய காதலின்பத்தைக் குறிப்பினும், நிலத்தியல்பால், நீர் அத்துடன் கலக்கையில் திரிகின்றதையும் எண்ணிப்பார்க்கிருர் கவிஞர்! அமிழ்தமும் தூய்மையற்ற முற்றத்தில் விழுந்தால் பயனற்று கெட்டுவிடுகிறது. (இந்த அமிழ்தம்—அங்கணம் உருவகத்தை பின்னர் ஆராய்வோம்); இவ்வாறே நீர் இனத்திற்கேற்பமாறும் அறிவிற்கு உருவகமாகிறது.

நிலத்தியல்பால் நீர் திரிந்தற்ருரும் மாந்தர்க்கு
இனத்தியல்பதாகும் அறிவு (452)

இத்துடன் முன்னர்க் கூறிய அறிவு-நீர் உருவகம் அமைந்த குறளை ஒப்பிட்டுப்பார்ப்போம்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி
மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு (396).

இவ்விரு குறட்பாக்களிலும் அறிவு நீரெனப் படுகிறது. மணற்கேணியில் ஊறும் நீர் தூய்மையானது ஆற்றுமணலில் ஊறும் நீர் தூய்மையானதால், இங்குத் தூய்மையான ஆழ்ந்த அறிவைக் குறிக்க மணற்கேணியின் உருவகத்தைப் பயன்படுத்துகிருர். ஆனல் கல்வியைப் பேணுது, சிற்றினம் சேருபவனின் அறிவோ தனது தன்மையில் திரிந்துவிடுகிறது. மண்ணிலிருந்து ஊறினுலும், எல்லாக்கேணிகளிலும் நீர் இனிமையாகவா இருக்கிறது? நல்லநீரும் அது கலக்கும் நிலத்திற்கேற்ப கெட்டுவிடுகிறதல்லவா? இப்பொருள் இனத்தியல்பால் கேடுறும் அறிவிற்கு உருவகமாகிறது. இவ்வாறு உடலழுக்கை நீக்கும் நீர், நிலத்து அழுக்கையோ, மனவழுக்கையோ மாற்றவியலாது திரிகிறது.

நீர் தனது தன்மையில் ஒடுவதைப்பல குறட்பாக்களில் காட்டுகிருர் வள்ளுவர். மனிதன் தவருன முறையில் நடக்கும் போதெல்லாம், அறம் மறையும் போதெல்லாம், மேகம் வறண்டுவிடும். பச்சை மட்கலத்தில் நீரைக்காப்பாற்ற இயலாது; இப்பொருள் வஞ்சனையான வழியில் ஈட்டிய பொருளின் உருவகமாக உள்ளது. தீயவழியில் ஈட்டிய பொருள் **பயனற்றநீர்** உருக்கொள்கிறது. **பயனற்றநீர்** கரையற்ற குளத்து நீராகவும், பசுமட்கலத்துள் வைத்த நீராகவும் மாறுகிறது. மாருக, தானே வளரும் பாத்தியில் நீர் சொரிதல் செழுமையின் அடையாளமாக நிற்கிறது. இது தாமே உணர்கின்ற கற்ருர்முன் பேசுவதற்கு உருவகமாகிறது. நீர் நல்லதே; ஆனல் அதில் மூழ்குதல், நுனிக்கொம்பில் ஏறுதல் போல் உயிருக்குத் தீங்கு விளைவிக்கிறது. இவ்வாறு மூழ்கியவனை மீட்கத் தீ விளக்கைக் கொண்டு தேட இயலுமா? இப்பொருள் கட்குடியில் மூழ்கியவனை அறிவு சொல்லி மாற்ற வியலாது என்ற பொருளுக்கு உருவகமாக அமைந்துள்ளது. நீரில் மூழ்கினல் இருள்; இருள் இங்கு கட்குடியால் எழும் அறிவு மயக்கத்திற்கும், தீ விளக்கு நல்லறிவிற்கும் உருவகங்களாகத் தோன்றுகின்றன.

இதுகாறும் கூறியவற்ருல். மழையும், நீரும் வாழ்க்கையில் தோன்றும் இருமைகளைத் தெளிவுற எடுத்துக்காட்டும் உருவகங்களாகப் பயன்படுவதைக்காணலாம். (வளரும்)

(1—4—64 இதழின் தொடர்ச்சி)

தொல்காப்பிய விளக்கம்

— பேராசிரியர் சி. இலக்குவனர்

32. ஆ, ஏ, ஓ அம்மூன்றும் வினா.

ஆ, ஏ, ஓ என்பன மூன்றும் வினாப் பொருளில் வருங்கால் வினா வெழுத்துக்கள் எனப் பெயர் பெறும்.

காட்டு : வந்தானா
வந்தானே
வந்தானோ

'வந்தானே' என்பது வினாப்பொருளில் இப்பொழுது வழக்கில் இன்று.

**33. அளபு இறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்.**

உயிர் எழுத்துக்கள் தமக்குரிய அளபினை (மாத்திரையை)க் கடந்து ஒலித்தலும், ஒற்றெழுத்துக்கள் தமக்குரிய அரை மாத்திரையைக்கடந்து ஒலிநீட்டி ஒலித்தலும் உண்டு. எங்கே உண்டு எனின் இசையொடு பொருந்திய பாட்டுக்களில்என்க. இவ்வாறு பாட்டில் நீண்டு ஒலிக்கும் முறைபற்றி இசை நூடுல் விளக்கமாகக் காணலாம்என்றுபுலவர் கூறுவர். தொல்காப்பியர் காலத்தில் இசைநூல் '**நரம்பின் மறை**' என அழைக்கப்பட்டுள்ளது. நரம்பினைக் கொண்டு இசைக்கருவிகள் அமைக்கப்பட்டமையின், 'நரம்பு' என்பது ஆகுபெயரால் இசைக்கருவியையும், இசை நூலையும் குறித்துள்ளது. நரம்பால் ஆக்கப்பட்ட இசைக்கருவிகள் இசையமைப்புக்கு அடிப்படையாய் இருந்துள்ளன.

குறிப்பிட்ட ஒரு துறைக்குரிய விளக்கங்களைக் கொண்டுள்ள நூல் 'மறை' என அழைக்கப்பட்டுள்ளது. அத்துறைப் பயிற்சியுடையார்க்கு அன்றி ஏனையோர்க்கு விளங்காத மறைபொருளாய் இருந்தமையின் 'மறை' எனப்பட்டதுபோலும்.

('நூன்மரபு' முடிந்தது)

2. மொழி மரபு:

சொற்களிடையே பயின்று வருங்கால் எழுத்துக்கள் பெறும் மரபினை விளக்குதலால் இவ்வியல் மொழி (சொல்) மரபு எனும் பெயரினைப் பெற்றுள்ளது என்பர்.

"இதனுள்கூறுகின்றதூ தனிநின்ற எழுத்திற்கு அன்றி மொழியிடை நின்ற எழுத்திற்கு என உணர்க" என்று இளம்பூரணர் கூறியுள்ளார்.

ஆகவே இவ்வியலுள், சார்பெழுத்துக்கள் எனப்பட்ட குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் சொற்களிற் பயின்றுவரும் முறைபற்றியும், அளபெடைபற்றியும் எழுத்துக்கள் தொடர்ந்து மொழியாகும் முறைபற்றியும், சொற்களில் எழுத்துக்கள் தொடர்ந்து நின்று இயங்கும் இயல்புபற்றியும் போலி எழுத்துக்கள் தோன்றும் முறைபற்றியும், சொற்களுக்கு முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துக்கள் பற்றியும், தெளிவுற அறியலாம்.

**34. குற்றியலிகரம் நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு
ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே.**

உரையசைக்கிளவிக்கு='மியா' என்னும் உரையிடத்துப் பயன்படும் அசைச்சொல்லில் 'யா' என் சினைமிசை='யா' என்னும் உறுப்பு எழுத்துக்கு மேல் (முன்) ஆவயின் வரூஉம் = அவ்விடத்தில் வருகின்ற, மகரம் ஊர்ந்து = மகரமெய்மீது ஏறி, குற்றியலிகரம் நிற்றல்வேண்டும் = குற்றியலிகரமானது நிற்றலுக்கு உரியதாகும்,

'மியா என்னும் அசைச்சொல், கேண்மியா (கேளுங்கள்) சென்மியா (செல்லுங்கள்) என்பன போன்ற சொற்களில் பயின்றுவரும். இம் 'மியா' என்பதின் கண்உள்ள 'இ' தனக்குள்ள ஒரு மாத்திரையில் குறுகி அரை மாத்திரையாய் ஒலிக்கும். ஆகவே இந்த 'இகரம்' **குற்றியலிகரம்** எனப்பட்டது.

**35, புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக்கூறின் முன்னர்த் தோன்றும்.**

'இகரம்', புணரியல் நிலையிடை = சொற்கள் ஒன்றோடொன்று சேருமிடத்து, குறுகலும் உரித்தே=தனக்குரிய ஒரு மாத்திரையில் குறைந்து ஒலித்தலும் பெற்றுள்ளது.

('மியா' எனும் அசையில் 'இகரம்' குறைந்து ஒலித்தலுடன், இரண்டு சொற்கள் சேருங்காலும் குறைந்து ஒலிக்கும்)

உணரக் கூறின் = அறியுமாறு கூறப்புகின், முன்னர்த் தோன்றும் = இனிக் கூறப்போகின்ற புணரியலுள் விளங்கத் தோன்றும்.

குற்றியலுகரப் புணரியலுள் (நூற்பா 5)

**"யகரம் வரும் வழி இகரம் குறுகும்
உகரக்கிளவி துவரத் தோன்றாது" எனக்கூறப்படுகின்றது.**

குற்றியலுகரம் சொல்லையடுத்து 'ய' வை முதலாக உடைய சொல் வந்தால் குற்றியலுகரம் மறைந்து இகரம் தோன்றி ஒரு மாத்திரையில் குறைந்து ஒலிக்கும்.

விறகு+யாது=விறகியாது. இங்கு 'உகரம்' மறைந்து 'இகரம்' தோன்றிக் குறைந்து ஒலிப்பதைக் காண்க.

(தொடரும்)

4ஆம் பக்கத் தொடர்ச்சி

கருத்தரங்கம் . . .

யே தென்னாட்டில் திணிக்கும் இந்தியா கும் இப்பிரிவில். ட்சக்கணக்கேயன்றி கோடிக்கணக்கில் இல்லை. இம்மொழி கற்றுக்கொண்டு வடநாடு சென்றால் எல்லாரோடும் பேச முடியாது.

மைதிலிக்குமட்டும் 13 கோடி மக்கள் என்பது புழுப்புட்டு என மறைமலையடிகள் வெளியிட்ட இந்தி பொதுமொழியா? என்ற அறிக்கை கூறுகிறது. இதற்கு 25 ஆண்டுகளாகியும் மறுப்புத் தெரிவிக்க வில்லை ஏன்? பரிசீலனைக்கு வந்தால் மர்மம் அம்பலமாய்விடுமே. ஆதலின் பெரும்பான்மையினர் பேசுவதென்பது மோசடிக் கணக்காகும்.

21—8—54 இந்தியதரநிர்ணயக்கழகம் கல்நாட்டுவிழாவில் நேரு "நான இந்தியில் பேசவேண்டி யிருப்பதால பெயர் என்ன? என்று தலைவரைக் கேட்டேன் 'தெரியாது' என்றனர். லாவா ஸ்ரீராமுலு, டி. டி. கேயையும் கேட்டேன்; அதே பதில்தான். கல்லைப் பார்த்தேன் "பாரதயமணக்சான்சுதா" என்றுளது; எப்பொருள் பயப்பினும்சரி சிருட்டி கர்த்தாவை நம்புகிறேன்"

பொருட்காட்சிசாலை கால்கோள் விழாவில நேரு, 'பொருட்காட்சி" எனபதற்குஇந்திசொல் என்னஎன்று கேட்டதற்கு "இந்தி வேண்டுமே" கூட்டத்திலிருந்து "ஆச்யாப்கா" என்ற சொல வநதது. நேரு "இதிற் பொருளில்லை என்றார். ஆசாத்துடமிருந்து "சாதுகா" என வந்தது. நேரு 'அல ஒவடமட்டம்' எனறார். மீண்டும் கூட்டத்திலிருந்து 'சங்கிரகாலயா" என வநதது. நேரு இதிலும் போதிய பொருளில்லை வேண்டா விருந்தாக ஏற்கிறேன் தேசீயம் என்பதற்கே இனனும சொல கண்டுபிடிக்க வில்லையே" என்று பேச்சைத் தொடங்கினர்.

12—5—55 தில்லி

சிக்கனச் சிரமைப்பு நிலையம் ஆமதாபாத் ஆங்கிலப்பெயர் 'லேபர்ட்டிரி ராசனலிசேசன்" என்பதற்குஎன்ன இந்தி என்று இவ் விழாவில் 10பேர்வரை கேட்டுவிட்டு ஆங்கிலத்திலேயே சொல்லநேர்ந்தது சட்டமன்றத்திலும் இங்ஙனம் பல நிகழ்ச்சிகள் உண்டு. இவ்வாறு இந்த மாநிலத்திலேயே இந்தி பேசுவோரிடையிலேயே ஒருவர் சொல்வது பிறிதொருவர்க்குத் தெரியாது அலங்கோலப்படும் இந்தி பிற மாநிலத் தொடர்புக்குரிய மொழியாக பொது மொழியாக என்றும் ஆகாது, ஆதலால் ஒப்புக்கொள்ள முடியாது.

வினு 3 : தமிழ்நாட்டில் இதுவரை எந்தஎந்த இடங்களில் இந்தி புகுந்துள்ளது ? அதனல் தனிமனித வாழ்வு யாருக்காகிலும் பாதிக்கப்பட்டுள்ளதா ?

திருச்சிராப்பள்ளியில் வானெலி நிலையத்தில் "ஆகாச்வாணி" புகுந்தது. இவ்விந்திப் பெயரை மறுத்த அவ்வூர் கி. ஆ. பெ. விசுவநாதம் தமது மனைவியுடன் சிறைபோக நேர்ந்தது. அதுமுதல் நல்ல தமிழ் புலமைகொண்டோர் யாரும் அங்நிலயத்திற் பேசுவதை நிறுத்திவிட்டனர். அதனல் நல்ல கருத்துரைகள் கேட்கும்போது மக்கள் பாதிக்கப்படுகின்றனரே?

அஞ்சல் துறையை நோக்கினல் பெயர்ப் பலகையிலிருந்து அஞ்சல் அட்டை (கார்டு) உறை (கவர்) பணவிடைத்தாள் (மணி ஆர்டர் பாரம்) சைச்சாத்து (ரசீது) "சர்வம் சகத் இந்திமயம்" ஆகிவிட்டதே தமிழ்நாட்டில் பேரூர்தோறும் அஞ்சல் நிலையமாகிவிட்டதே. ஒரூர்க்கோரூர் பணம் அனுப்பினல் அதற்கு இந்தியாவேண்டும்? பணம் பெறுபவனவது குறிபோட்டுக் கொடுத்த இடத்தில் கையெழுத்திட்டுப் பெற்றுக்கொள்ளலாம். பணம் அனுப்பவன் தாளை நிறைவு செய்ய இந்தி படித்தவன் ஊர்களில்லையே, எங்காவது நகரங்களிலன்றோ தேடவேண்டும். நிறைவு செய்துகொடுத்தாலும் முகவரி சரியா என்று பார்க்க முடியுமா? படித்து முட்டாளாகவன்றோ இருக்கவேண்டியுளது டாக்டர் சுப்பராயன் அவர்கள் சொன்னபடி தமிழும் இந்தியுமாக இரண்டே திங்கள் வந்தது மீண்டும் வேதாளம் முருக்க மரம் ஏறிக்கொண்டதே அஞ்சல் வேலைக்கு மனுப்போட்டால் மேலிடத்தில் கேட்பதென்ன? உனக்கு இந்தி தெரியுமா?" இதுதானே கேள்வி. இந்தி தெரிந்தவனும், தெரியாதவனுமாக இருவர் மனுப்போட்டால் தெரிந்தவனுக்கு வேலைகிடைக்கும். இந்தி தெரியாதவனுக்கு இல்லையென்ற பதிலும்கூட கிடைக்காது. இங்ஙனம் மத்திய அரசின் நேரிடையான எல்லா அலுவலகங்களிலும், இந்தி புகுந்துள்ளது, தமிழும் இந்தி படியாத தமிழனும் வெளியேற நேர்ந்துள்ளது என்பதை உணரவும்.

வினு 4 : இந்திமொழியால் எங்காவது ஓரிடத்தில் தமிழ்மொழி மறைந்திருக்கிறதா?

இதுகாறும் மேலே கூறியவற்றில் தமிழ்மொழி மறைந்திருப்பன புலனகும். இனி இந்தி ஆட்சி நடைபெறும்போது ஓரிடமென்ன எல்லாவிடங்களிலுமே தமிழ் மொழி மறையும் "மெல்லவினித் தமிழ் சாகும்" நிலையை நாமே காணலாம். வினுவுக்காக இந்தியிலிருந்து தமிழ்மொழிக்குப்பதிலாக அரசியல் சட்டப்புத்தக அநுபந்தத்திலுள்ள சில சொற்களை ஈண்டு காட்டுவாம்.

	தமிழ்	ஆங்கிலம்	இந்தி
1.	இந்தியக்குடியரசு	டொமினியன்	சம்பூர்ணபிரபுத்துவசம்பன்ன லோகதந்தராத்மககனராச்யே
2.	கூட்டுறவு	கோவாபரேடிவ்	ஸககாரீ ஸம்ஸதா
3	ஒப்புதல்	அப்ரூவ்	அனுமோதனகாஞ
4.	பொதுஆணை	பப்ளிக் ஆர்டர்	ஸர்வஜானீகவியவஸ்தா
5.	மாநிலத்தலைவர்	கவர்னர்	தத்ரபவன்பிரம்மசிரேஸ்ட்

இங்ஙனந் தமிழும் ஆங்கிலமும்மறைந்து அரசியற் புத்தகத்தில் அச்சேறியிருக்கும் இந்தி மொழிகளென்பதை யுணரவும்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

திருவள்ளுவர் திருநாள் விழா

பரிசுப் போட்டிகள்

வருகிற வைகாசித் திங்களில், உலகப் பொதுமறையாம் திருக்குறளை நமக்கருளிய தெய்வப் புலவர் திருவள்ளுவனரின் திருநாள் விழாவைக் கொண்டாடச் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் முடிவு செய்துள்ளது. அதையொட்டிக் **கட்டுரைப் போட்டியும் புத்துரை விளக்கப்போட்டியும்**நடைபெறும்; கட்டுரைப் போட்டிக்கு முறையே ரூ. 100, 75, 50. பரிசு வழங்கப்பெறும் புத்துரை விளக்கப் போட்டிக்குக் குறள் ஒன்றுக்கு ரூ. 10வீதம் பரிசளிக்கப்பெறும். போட்டிக்குரிய தலைப்புகளையும் மற்ற விவரங்களையும் 'செயலாளர், திருவள்ளுவர் திருநாள் விழா' 1/140 பிராட்வே, சென்னை–1. என்ற முகவரிக்கு எழுதிப் பெறவும்.

13ஆம் பக்கத் தொடர்ச்சி ...

வினு 5 : பிற மொழிகளைக் கற்பதால் தான்ஒருவனின் தாய்மொழி உலகப் புகழ் பெறமுடியும் என்றகருத்தை ஒப்புக்கொள் கிறீர்களா? இந்த வகை யில்தான் தமிழாலாகியதிருக் குறள் இன்று உலகப்புகழ் கண்டுள்ளது என்பதை மறைக்க இயலுமா?

பிறமொழி என்பது தாய்மொழி யல்லாத ஏனைய மொழிகளனைத்தும் ஒவ்வொருவருக்கும் பிற மொழியே தான். அத்தகு மொழிகள் உலகில் 2800ல் இருந்து 3006வரை கணக் கிடுகிறூர்களென்ல எம்மொழிகற் கவுரியது எனத் தேர்வது இன்றி யமையாமையாகிறது. அத்தேர்வில் முதன்மையாகநிற்பது ஆங்கிலமென் பதை மேலே கூறினோம். இனிஊண், உடை, உறையுள் என்ற அன்றாடப் போராட்டத்திலமைந்த மக்கள் பலர் தாய்மொழியும் கற்க வாய்ப் பிலர். சிலர் கற்க முன்வந்திருப்பதும் தங்கள் பிற்கால வாழ்வை எண்ணி யாகும். அதற்கும் இடையூறுகள் பெருகுகின்றன. இந்தி மாநில மக் கட்குத் தாய்மொழியோடு ஆங்கிலம் கற்பது எளிமை. பிற மாநில மக்கள் தாய்மொழி ஆங்கிலம் இந்தி என மூன்று மொழி கற்பது கடுமை. இத ஞல் ஆட்சிக் குழுவினரின் நடுநிலை யின்மை புலனுகிறது. இதுவன்றியும் "அகில இந்திய சர்வீசு போட்டிப் பரீட்சை"யும் இந்தியில் எழுத ஆணையிடுமாறு ம. கல்வி மந்திரி சாக்ளாவிடம் சொல்ல அவர் ஒளி மறைவின்றி "போதனு மொழிக்கே இன்னும் இந்தி தகுதி பெறவில்லை. போட்டிப் பரீட்சை எழுதுவதென் ருல், அதற்கு ஒரு கமிட்டியின் மூலம் ஆராயலாம் என்றனர்

உடனே ம. உள்துறை மந்திரி நந்தா அவர்கள், இந்திபேசாத மாநில மந்திரிகளையெல்லாம் அழைத் துவரச் செய்து. கல்விமந்திரி சக்ளா வையும் வரவழைத்து முதன் மந்திரி கள் மகாநாடு என்ற தலைப்பிட்டு இந்திபேசாத மாநில முதன் மந்திரி களை "ஆமாம்சாமி" போடுமாறு செய்து போட்டிப்பரீட்சை எழுதும் தீர்மானத்தை நிறைவேற்றிக்கொண் டார்கள். இதுபற்றித் தினமணி 14--3—64 தலையங்கத்தில்"போதிய தகுதியற்ற இந்தியை அகில இந்திய ஆட்சிமொழித்துறையில் ஏற்கனவே உபயோகித்துவருவதே தவறு. அதை யூனியன் சர்வீசு போட்டிப் பரீட்சை மொழியாக்குவது அதைவிடப் பெருந்தவறு. இதற்கு முதலமைச்சர் இசைவு கூறியது வடிகட்டிய அக்கிர மம்... "விவேகமுள்ளவர் செய்யக் கூடிய காரியமல்ல"..."நல்லாட்சியை சிதைத்து தேச ஒற்றுமைக்கு உலை வைக்கின்ற நாசவேலையாகவே மதிக் கப்பெறும்" என்றெல்லாம் கண்டித் துள்ளது.

நாட்டைப் பிரிந்தோடும்படி செய் வதற்குக் காரணமான இந்திவெறி யர்களைப் பாதுகாப்புச் சட்டப்படி கொஞ்சம் காலத்துக்குச் சிறையி லடைத்து வைத்திருப்பது நன்மை யென எண்ணுகிறேன்."

பட்டாபிராமன் சட்டமன்ற
உறுப்பினர்

இந்தி வரலாறு "1808ல் கில் கிரைட்" என்ற ஆங்கிலேயரின் உத வியால் "லல்லுசிலால்" "பிரேம் சாகர் என்ற" என்ற ஒரு நூல் எழுதலானூர். அதில் உருது, அரே பியா, பாரசீகம் முதலிய மொழிகள் கலந்த கதம்பமாயிருந்தது. காட்டு மொழியாய்க் காட்சியளித்தது. இத னை ஐரோப்பியர் "இந்தி" என்ற ழைத்தனர். உரைநடை மட்டும் உண்டு. கவிதைகள் பீகாரி, பாய்ஸ் வாரி, பிராசுகுவி மொழிகளில் இருந் தன" வங்கம், "ஆசிய சங்கப்பத்தி ரிகை 1888ம் ஆண்டு வெளியீடு இதனை 5—5—56 இந்து இதழில் "சார்சு ஏ. கிரியர்சன்" வெளியிட் டிருக்கிறூர்.

இத்தகு இந்திபோன்ற பிறமொழி படிப்பதால் ஒருவன் தாய்மொழி புகழ்பெறமுடியாது. வயிற்று வளர்ப் பின் பொருட்டாகப் படிப்பதும் பயன்தராது அருமையினும் அரு மையாகச் சிலர் பலமொழி படித்துப் பன்மொழிப் புலவராவதுண்டு. அத் தகையோர்களை ஊக்குவித்து "பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண் டும்" என்றபடி நிலநூல், வானூல், விஞ்ஞான நூல், தொழில் நூல்கள் வளர்ந்துள்ள பிறமொழி நூல்களை தத்தம் நாட்டுத் தாய் மொழியில் எழுதி எல்லாமக்களுக்கும்அறிவூட்டி நாட்டை முன்னேறச்செய்யும் மொ ழியைத் தேர்ந்து எடுத்துப்படித்துப் பணி செய்யும் மூலமாய்த் தனது தாய்மொழியும் புகழ் பெறு மென்ப தை ஒப்புக்கொள்ளலாம்.

(தொடரும்)

தமிழன்னை எங்கே! கம்பரையும் திருவள்ளுவரையும் ஈன்ற எனது இன்பத் தாய் எங்கே? அந்தோ எங்கும் ஒளி பரப்பிய என் தாயைத் தேடியோ காணலாயிற்று. ஓர் இருள் மூலையில் வறுமையும் அடிமையும் பிடித்து வற்றி எலும் பெடுத்த ஏழை கள் சூழ, முகங்கூரவி இருக்கின்றனள் அன்னை, இப்போது அவள் இருப்பது அரியணை அல்ல; சங்கப்பலகை அல்ல; வெறுந் தரையில் ஆதர வின்றி இருக்கிருள்.

"முழுமதி முகத்தில் முறுவலைக் காணேன்;
செழுந்திருக் கையில் செங்கோ லில்லை!
அருளிசை இருந்தும் அறிவார் இல்லை!
பொருளிசை இருந்தும் புகட்டுவார் இல்லை!
செஞ்சொல் உரைத்தும் செல்வாக் கில்லை!
அஞ்சும் பேதையர் அயலுக் கடியார்
பிஞ்சிள மைந்நர் பிணங்கிப் பிரிந்தார்!
அருஞ்சுவை அளித்தும் அருந்துவோர் இல்லை!
வெறுஞ்சிடு மூஞ்சிகள் விரட்டின இங்கே!
குடக்கிருந் தொருபுயல் குப்புறந் தள்ள
வடக் கிருந் தொரு புயல் வாரி விழுங்கத்
தவிக்கிருள் அன்னை"

கவியோகி சுத்தானந்த பாரதியார்

வீடுகள் தோறும் திருக்குறள் வாழ்வு

1—4—64 இதழின் தொடர்ச்சி)

மொழித்திற முட்டறுத்தல்

பெருப்புலவர் ந. மு. கோவிந்தராய நாட்டார்

மேனாட்டு மொழிநூலறிஞர் இருவகையில் மொழிகளைப் பிரித்து ஆராய்ந்துள்ளனர். ஒன்று, மொழியினம் பற்றியது (Genetic Classification) இரண்டாவது வாக்கியங்களின் சொல்லமைப்புப் பற்றிய பிரிவு (Morphological Classification).

1. மொழியினங்கள்

1. இந்திய ஐரோப்பிய மொழிகள் (Indo-European): இவற்றில் ஆரியம், ஆர்மீனியம் போன்ற எட்டுப் பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவிலும் பலமொழிகள் உள்ளன. சமசுகிருதம், இலத்தீன், கிரேக்கம் முதலியன இவ்வினத்தின் சிறப்பான மொழிகள்.

2. செமிட்டிக்கம் (Semitic): இதன்கண் இருபிரிவுகளும் பலமொழிகளும் உள்ளன. அரபி, எபிரேயம் முதலியன இவ்வினத்தைச் சேர்ந்தவை

3. யூரல் ஆல்டாய் (Ural Altaic): இதன்கண் ஆறு பிரிவுகளும் பல மொழிகளும் உள்ளன.

4. கொலேரியம் அல்லது முண்டா (Kolarian or Munda).

5. தமிழ் அல்லது திராவிடம் இதன்கண் பதினன்கு கிளை மொழிகள் உள்ளன.

6. எமட்டியம் (Hamitic):—மூன்று பிரிவுகளும் பல கிளை மொழிகளும் உள்ளன.

7. பாண்டு (Bantu):—24 மொழிகளும் 150 கிளை மொழிகளும் உள்ளன.

8. நீக்ரோயம் (Negro):—பல மொழிகள் உள்ளன.

9. நூபியம் (Nubian):— பல மொழிகள் உள்ளன.

10. இந்திய சீனம் (Indo Chinese): மூன்று பிரிவுகளும் பல கிளை மொழிகளும் உள்ளன.

11. மலேயம் (Malayan): இரண்டு பிரிவுகளும் பல கிளைகளும் உள்ளன

12. பாலினீழியம் (Polynesian): பல மொழிகள் உள்ளன.

13. அமெரிக்கம் (American): அமெரிக்கப் பழங்குடி மக்களால் பேசப்படும் 167 மொழிகள்.

14. இலாப்பிலாந்தியம் (Laplandian): குளிர் மண்டல மக்களால் பேசப்படும் பல மொழிகள்.

இவ்வாறு மொழிகளை இனங்களாக வகைப்படுத்துவதற்கு, அவ்வம் மொழிகளில் உள்ள நெருங்கிய உறவு முறைப் பெயர்கள், உடலுறுப்பின் பெயர்கள், மூவிடப்பெயர்கள், எண்ணுப்பெயர்கள், வா, போ, நட, இரு, பார், பேசு, சொல், உண், போன்ற ஏவல்வினைப் பெயர்கள் முதலியன மொழிநூலறிஞர்களுக்கு உதவியாய் நின்றன எனக் கூறலாம். இந்திய ஐரோப்பிய மொழிகள் என்ற இனத்தில் 131 மொழிகள் வரையில் காட்டப்பட்டுள்ளன. இவற்றில் சமசுகிருதம், இலத்தின், கிரேக்கம் உள்ளிட்ட 81 மொழிகள் இறந்தன. செமிட்டிக்கம் என்ற இனத்தில் உள்ள 35 மொழிகளில் 18 மொழிகள் இறந்தன. எமட்டியம் என்ற இனத்தில் உள்ள 40 மொழிகளில் 13 மொழிகள் இறந்தன. இச் செய்திகள் டக்கர் என்பார் எழுதிய 'மொழியின இயற்கை வரலாறு' என்ற நூலின் முன்னுரையிலும் (T. G. Tucker's Introduction to the Natural History of Language), New Standard Dictionary என்ற அமெரிக்க ஆங்கிலஅகராதியிலும் விளக்கப்பட்டுள்ளன.

2. வாக்கிய சொல்லமைப்புப் பற்றிய பிரிவு

1. தனி நிலைமொழிகள். (Isolative Languages): இம் மொழிகளின் வாக்கியங்களில் சொற்கள் ஒன்றோடொன்று ஒட்டாமல் தனித்தனியே நிற்கும். சீனம், பர்மியம், சயாம் மொழிகள் இவ்வகையைச் சேர்ந்தவை.

2. ஒட்டு நிலை மொழிகள் (Agglutinative Languages): வேர்ச் சொல்லாகிய பகுதிகளுடன், இடை நிலை விகுதி முதலியன சேர்ந்தும், பெயர்களுடன் வேற்றுமையுருபு முதலிய சேர்ந்தும் சொற்கோவையாகிய வாக்கியங்கள் அமையும் முறை இம்மொழிகளிற் காணப்படும். தமிழ், திராவிட மொழிகளும் சித்திய மொழிகளும் இவ்வகையின.

3. உட்பிணைப்பு மொழிகள் (Inflectional Languages): வேர்ச் சொற்கள் இரண்டு சேருங்காலத்து இரண்டும் சிதைந்து ஒன்றுபடும். ஆகையின் வேர்ச்சொல் இன்னதென அறியமுடியாதபடி சொல்மாறி விடுகின்றது. சமசுகிருதமும் இந்திய ஐரோப்பிய மொழிகளிற் பலவும் இவ்வகையைச் சார்ந்தவை.

4. சொல்வாக்கிய நிலைமொழிகள் (Incorporative Languages): இவ்வகையில் சொற்களுக்கும் வாக்கியங்களுக்கும் வேறுபாடு காணமுடியாதவாறு பல சொற்கள் ஒன்றுருய்ப் பிணைந்து வாக்கியமாய் நிற்கின்றன. அமெரிக்கப் பழங்குடி மக்களின் மொழிகள் இவ்வகையைச் சேர்ந்தவை.

சொல்லமைப்பு முறையால் மொழிகளை இவ்வாறு நான்கு வகையாகப் பிரித்தாலும் இந்நிலை இம் மொழிக்கே யுரியதென அறுதியிடுவதில்லை. ஏனெனில் பல நிலைகள் ஒரே மொழியிலும் காணப்படுகின்றன.

ஊர்கள் தோறும் குறள்நெறி இயக்கம்

ஔவையார்க்கு நினைவு

புதுடெல்லியில் சாணக்கிய புரியில் உள்ள அமெரிக்கப் பல்நாட்டுப்பள்ளிக்கூடத்தில் ஔவை மூதாட்டியின் திரு உருவப் படிமையைத் திறந்து வைத்துள்ளனர். ஔவையின் பெயரும் புகழும் தமிழகம் நன்குஅறிந்துள்ளது. ஔவையின் பெயரால் ஊர்கள் பல உண்டு; ஔவையின் பெயரைத் தாங்கிய மகளிர்களும் பல உளர். ஔவைக்குக் கோயில்களும் உள. ஔவையைப்பற்றிய கதைகளும் பலப்பல. இவையெல்லாம் ஔவைப் பிராட்டி பெற்றுள்ளசீர்த்தியையே காட்டுகின்றன.

நல்லிசைப்புலமை மெல்லியராக வாழ்ந்துள்ள ஔவையார் பலராவார். தமிழிலக்கியவரலாற்றால் அறியக்கூடியவர் நால்வர். சங்ககாலத்தில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குமுன்பு வாழ்ந்தவர்; கி பி, எட்டாம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்திநாயனார் காலத்தில் வாழ்ந்தவர்; ஒட்டக்கூத்தர் காலத்தில் கி. பி. பன்னிரண்டு–பதின்மூன்றாம் நூற்றாண்டு-வாழ்ந்தவர். 'ஆத்திசூடி'பாடிய ஔவை–காலம் சரியாகத் தெரிந்திலது.

நால்வரையும் ஒருவராகக் கழுதுவது தவறு. சங்ககால ஔவை அரசியலில் தூதுவராகவும் பணியாற்றிப் புகழ் எய்திவர்.
அவர்தாம்

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்ல வாழிய நிலனே

என நாட்டின் நலத்திற்கு ஆடவர்மீது பெரும் பொறுப்பைச் சுமத்தியவர்.

ஔவையார் புகழ்பாடி அன்னைத் தமிழ் காப்போம்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் தி. மு. கழகம் பெற்று வரும் செல்வாக்கைக்கண்டு பொறாமையுற்று அதனைப் பழித்தும் இழித்தும் கூறிக்கொண்டு இந்தி முதன்மை எதிர்ப்பின் வன்மையைச் சிதைத்துக் கொண்டு உழல்கின்றனர். கட்சிச் சார்பு அற்றவர்களோ "இராமன் ஆண்டால் என்ன; இராவணன் ஆண்டால் என்ன." என்ற போக்கினராய் இந்தி முதன்மையால் ஏற்படவிருக்கும் பெருங்கேட்டை எண்ணிப் பார்த்துச்செயலாற்றாது காலம் கழித்து வருகின்றனர்.

கட்சி வேறுபாடுகளைமறந்து அனைவரும் ஒன்றுபட்டு எதிர்ப்புத் தெரிவித்தாலன்றி இந்தி முதன்மை நீங்காது; செந்தமிழும் காக்கப்படாது இந்தி முதன்மை வலுப்பெறுமேல், மொழியிழந்து, மானமிழந்து, வாழ்விழந்து ஊமையர்களாய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் இரண்டாம் நிலை-மூன்றும் நிலைக் குடிமக்களால் எமனுக்கு நாளோட்ட வேண்டிய நிலை வரும் என்பதில் எள்ளளவும் ஐயமின்று.

தி. மு. கழகத்தினர் இந்தி முதன்மையை நீக்கியபெருமை தமக்கேசேர வேண்டும் என்று கருதித் தனியே இவ்வுரிமைப் போரில் ஈடுபட்டுள்ளனர்போலும். தனியாக நின்று முயல்வதினும்பிறரையும்சேர்த்துக்கொண்டு இம்மானப் பெரும் போரில் ஈடுபடுதல் வெற்றிக்கு வழியாகும் என்பதை அன்போடு அறிவித்துக் கொள்கின்றோம்

தி. மு. க. வுக்கு
வேண்டுகோள்

தமிழநாட்டில் உள்ள அனைத்துக் கட்சியினரையும்-காங்கிரசுக் கட்சியினரையும் உளப்படுத்தியே கூறுகின்றோம்-கட்சிச் சார்பு அற்றவரையும் ஒன்றுபடுத்தி இந்தி முதன்மையைத் தடுப்பதற்குரிய இயக்கத்தைத் தமிழ் நாட்டில் உடனே உருவாக்குதல் வேண்டும். தமிழ்நாட்டில் மட்டும் எதிர்ப்புமுனை உருவானால்போதாது: எல்லா மாநிலங்களிலும்இந்தி முதன்மை எதிர்ப்பு இயக்கங்கள் தோன்றச் செய்து. இதனை எல்லா இந்தியப் பொருளாக்கி, எல்லா மாநிலத்தவரும் கூடிச்செயல்பட்டாலன்றி இன்றுள்ள சூழ்நிலையில் இந்தி முதன்மையைத் தடுத்தல் இயலாததாகும். ஆகவே இத்துறையில் முன்னின்று பணியாற்றும் தி மு. கழகம், எல்லோரையும் ஒன்றுபடுத்திக் கட்சிக்கு அப்பாற்பட்ட மக்கள் கிளர்ச்சியாக்கி அந்திக் கொடுங்கோன்மைத் தனியாட்சியை அகற்றுதல் வேண்டும். இன்றேல் இந்தி முதன்மைக்கு அடிமையாகி நம் மொழியிழந்து. வாழ்வு இழந்து மாளவேண்டிய இரக்கத்தக்க இழிநிலை தான் ஏற்படும்.

தமிழால் வாழும் புலவர்களே!
தமிழைக் காக்கத் திரண்டெழுவீர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: பேராசிரியர் சி. இலக்குவனார், கருமுத்து அகம், மதுரை-6.
அச்சிட்டோர்: கு. திரவியம், மேலாளர், கலைக்கோயில் அச்சகம், 62, நாயக்கர் புதுத்தெரு, மதுரை.